கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(14.04.2019 - 14 சித்திரை 2019 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 09, கதிர் - 206, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /49 / NEWS / 2019

# ஞான ஒளி

ඥාන ඔලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05

எமது தமிழ், சிங்கள சகோதரர்கள் அனைவருக்கும் ஞான ஒளியின் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம். பிறக்கப்போகும் புத்தாண்டில் வசந்தம் பொங்கி மகிழ்வுடன் வாழ வாழ்த்துகின்றோம்.



# உயிர்த்தார் இயேசு புரட்சியாய்

## விதைக்குள்ளிருந்து விருட்சமாய்...



வெறுப்பு, பயம் பற்றினையே
விவேகத்தோடு வென்றிடவே
அமைதி, ஆற்றல் பற்றின்மையை
எம்மவர்க்கு அளித்திடவே
பூட்டிய இரும்புக் கூட்டின்
கதவு திறக்கப்பட்டது.
சீரழிவுகளைச் சீர்மைப்படுத்திய
சிறுத்தை வெளியே வந்தது
எலியென இழிந்தவர் நடுவில் புலியெனப்
புறப்பட்டது

**ஆம் இயேசு உயிர்த்தார்**
**அல்லேலூயா!**

ஆணவச் செயல்கள், பேராசை,
சுயநலம், நாவடக்கம், வஞ்சகம், அநீதி,
போதைவஸ்துப் பாவனை ஆகியவை
இயேசுவின் கல்லறையில் புதைக்கப்பட்டு,
உண்மையும் நீதியும் நம் ஆண்டவர்
இயேசுவால் உயிர்த்தெழுந்தது.
இயேசுவின் உயிர்ப்பில் – இன்று
மகிழ்வுறும் நாமும் புத்தம் புது
மனிதர்களாய் புதுமணம் வீசிட
உயிர்த்தெழுவோம்!!

ஆக்கம் : அருட்சகோ. R. ஜோசப் ஜெயகாந்தன்

**இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா வாழ்த்துக்கள்**

## இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் ஈஸ்டர் செய்தி - 2019

திருவழிபாட்டு ஆண்டின் மாண்புமிக்க திருவிழாக்கொண்டாட்டமாக இயேசுக்கிறிஸ்துவின் உயிர்ப்புவிழா (ஈஸ்டர்) அமைகிறது. இதில் நாம் சாவின் மீதும், பாவத்தின் மீதும் வெற்றிகொண்ட நாசரேத்தூர் இயேசுவை அறிக்கையிட்டுக் கொண்டாடுகிறோம். **"வாழ்பவரை இறந்தவரிடையே தேடுவானேன்? அவர் இங்கு இல்லை, உயிர்த்துவிட்டார்"** (லூக்கா 24:5) என்னும் வார்த்தைகள் எம் காதுகளில் ஒலித்துக்கொண்டு இருக்கின்றன. அவரது உயிர்ப்பின் பயனுறுதிப்பாடு காரணமாக எம்மில் புதிய நம்பிக்கை புலர்ந்துள்ளது. அத்துடன் தான் வழங்கும் புதுப்பிக்கப்பட்ட வாழ்வில், தான் பிரசன்னமாக இருந்து எம்மையும் அவ்வாழ்வில் பங்கேற்க அழைப்புவிடுக்கிறார்....

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயரின் ஈஸ்டர் செய்தி - 2019



இறைவன் தனது இறைத்தன்மையிலிருந்து வெறுமையாகி அனைவரும் மீட்புபையும் விடுதலையையும் பெற்றுக்கொள்ள எடுத்த வெற்றியின் அனுபவமே பாஸ்காவாகும்.

இவ்விடுதலையைப் பெற உந்துதலாக இருந்தது இச்சிலுவையே. இன்று நாம் எமக்கு வரும் சிலுவையைப் புறக்கணித்து அதாவது நாம் படும் துன்பம், துயரம், பீடணைகளை, தவிர்த்து சந்தோஷமாக வாழுவதற்கு குறுக்கு வழியை தேடுவதால் இன்று தன்னலம் நிறைந்துள்ளது. துன்பப்படுவதன் உண்மையான அர்த்தத்தில் எமது கவனத்தை செலுத்தி சுயநலக் கட்டிலிருந்து விடுபடும் காலமே இப்பாஸ்கா காலம்....

தொடர்ச்சி 02ம் பக்கம்..

**ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே! (தி.பா 118)**





# இளைஞர் ஆண்டில் இறைவனின் திராட்சைத் தோட்டத்திற்கு உயர் மறைமாவட்டத்திலிருந்து 10 புதிய குருக்கள்.

கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் குருத்துவ பணியினை தொடர்ந்தாற்றும் எதிர்பார்ப்புடன் காத்திருக்கும், 10 புதிய தியாக்கோன் அருட்சகோதரர்களை குருக்களாக திருநிலைப்படுத்தும் திருப்பலியானது கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் 2019, வைகாசி மாதம் 04ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில் நடைபெற உள்ளது. அருட்சகோதரர்கள் குறித்து தகவல்கள் ஞான ஒளி பத்திரிகைக்காக....



### அருட்சகோதரர். பிரியஷாந் அரவிந்த

**பிறப்பு** : 1990 மார்கழி 31ஆம் திகதி
**பெற்றோர்** : திரு. ஜோசப் பற்றிக், திருமதி. லலிதா பெரேரா
**பங்கு** : பட்டகம, குணமளிக்கும் இயேசு ஆலயம்

**இவர் தனது முதற்திருப்பலியை வைகாசி மாதம் 05ஆம் திகதி காலை 8.30 மணிக்கு,பட்டகம,கப்புவஹுாரா குணமளிக்கும் இயேசு ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



### அருட்சகோதரர். இசுரு லக்பிரிய

**பிறப்பு** : 1989 ஆனி 21ஆம் திகதி
**பெற்றோர்** : திரு. ஜோன் பேனாட் வின்சன் சில்வா, திருமதி. பத்மா சொய்சா
**பங்கு** : றாகமை, லிங்கியாவத்தை, கிறிஸ்து அரசர் ஆலயம்

**இவர் தனது முதற்திருப்பலியை வைகாசி மாதம் 05ஆம் திகதி காலை 8.30 மணிக்கு, றாகமை, லிங்கியாவத்தை, கிறிஸ்து அரசர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



### அருட்சகோதரர். ஜுட் ஒஸ்மன்

**பிறப்பு** : 1990 புரட்டாதி 19ஆம் திகதி
**பெற்றோர்** : அமரர். ரொனி ஒஸ்மன், திருமதி. சாமின் ஒஸ்மன்
**பங்கு** : கோட்டை, புனித தோமையார் ஆலயம்

**இவர் தனது முதற்திருப்பலியை வைகாசி மாதம் 05ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு, கோட்டை புனித தோமையார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



### அருட்சகோதரர். ஷாலிந்திர கொட்டிகாவத்த

**பிறப்பு** : 1991 மார்கழி 04ஆம் திகதி
**பெற்றோர்** : திரு. கெனியூட் கொட்டிகாவத்த, திருமதி. டிஸ்னா கொட்டிகாவத்த
**பங்கு** : கந்தானை, புனித செபஸ்தியார் ஆலயம்

**இவர் தனது முதற்திருப்பலியை வைகாசி மாதம் 05ஆம் திகதி காலை 8.00 மணிக்கு, கந்தானை புனித செபஸ்தியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



### அருட்சகோதரர். அருண கிளமன்ட் பர்னாந்து

**பிறப்பு** : 1988 கார்த்திகை 14ஆம் திகதி
**பெற்றோர்** : திரு. P.A பர்னாந்து, திருமதி. ரோகிணி பர்னாந்து
**பங்கு** : லியனகேமுல்ல, புனித அந்தோனியார் திருத்தலம்.

**இவர் தனது முதற்திருப்பலியை வைகாசி மாதம் 05ஆம் திகதி காலை 8.00 மணிக்கு, லியனகேமுல்ல புனித அந்தோனியார் திருத்தலத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



### அருட்சகோதரர். T. ஷெரோன் யசிஸ் ஶ்ரீ பர்னாந்து

**பிறப்பு** : 1988 ஆடி 07ஆம் திகதி
**பெற்றோர்** : திரு. பிரியந்த பர்னாந்து, திருமதி. நிர்மலி பெரேரா
**பங்கு** : கட்டுநாயக்க, புனித பேதுரு, பவுல் ஆலயம்.

**இவர் தனது முதற்திருப்பலியை வைகாசி மாதம் 05ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு, கட்டுநாயக்க, புனித பேதுரு, பவுல் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



### அருட்சகோதரர். இந்திரஜித் டீ சில்வா

**பிறப்பு** : 1991 மார்கழி 02ஆம் திகதி
**பெற்றோர்** : திரு. மக்சிமஸ் காமினி, திருமதி. மேரியன் ரோகிணி
**பங்கு** : வெலிகமபிட்டிய, புனித அன்னம்மாள் ஆலயம்.

**இவர் தனது முதற்திருப்பலியை வைகாசி மாதம் 05ஆம் திகதி காலை 7.30 மணிக்கு, வெலிகம்பிட்டிய புனித அன்னம்மாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



### அருட்சகோதரர். அமில மதுசாந் பீரிஸ்

**பிறப்பு** : 1990 ஐப்பசி 08ஆம் திகதி
**பெற்றோர்** : திரு. ஐவன் ரெஜினோல்ட் பீரிஸ், திருமதி. மேரி அனஸ்ரா சரலி பெரேரா
**பங்கு** : தளுகம, பமுனுவில, புனித சூசையப்பர் ஆலயம்

**இவர் தனது முதற்திருப்பலியை வைகாசி மாதம் 05ஆம் திகதி காலை 8.30 மணிக்கு, தளுகம பமுனுவில, புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



### அருட்சகோதரர். அஷிந்த ரெக்ஷி நிமல் சில்வா பிள்ளை

**பிறப்பு** : 1984 மார்கழி 09ஆம் திகதி
**பெற்றோர்** : திரு. ஒஸ்ரின் சில்லா அந்தனிபிள்ளை, திருமதி. திரேசா குரூஸ் அலெஸ் பிள்ளை
**பங்கு** : தோப்பு, புனித பிலிப்நேரியார் ஆலயம்.

**இவர் தனது முதற்திருப்பலியை வைகாசி மாதம் 05ஆம் திகதி காலை 7.00 மணிக்கு, தோப்பு, புனித பிலிப்நேரியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



### அருட்சகோதரர். டொன் அசித் ஷாமர

**பிறப்பு** : 1989 புரட்டாதி 29ஆம் திகதி
**பெற்றோர்** : திரு. நிமால் பிரின்ஸ், திருமதி. ஜெஸ்மி சிறியானி குரே
**பங்கு** : களனிய, புனித திரேசாள் ஆலயம்.

**இவர் தனது முதற்திருப்பலியை வைகாசி மாதம் 05ஆம் திகதி காலை 10.00 மணிக்கு, களனிய புனித திரேசாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**

## இப்புதிய அருட் தந்தையர்களை வாழ்த்தி வரவேற்பதோடு அவர்களின் பணிவாழ்வு இயேசுவின் வாழ்வாக மாறிட வாழ்த்துகின்றோம்.

**தகவல்கள் மற்றும் படங்கள்: சுனில் பர்னாந்து, றொஷான் பிரதீப்**

## 01 கொழும்பு உயர்....

இயேசுநாதர் சகலத்தையும் துறந்த வாழ்வினூடாக தன்னலம் நிறைந்த அடிமைத்தனத்திலிருந்து வெறுமையாகி அனைவரும் சரியான பாதையில் பயணிக்கும் வழியை தனது பாடுகள் உயிர்ப்பின் ஊடாக காட்டினார். எமது பெருமை, அகங்காரம் ஆடம்பரம் ஆகியவற்றிலிருந்து நம்மை வெறுமையாக்கி திறந்த மனதுடன் உண்மையான தன்மை கண்டு அதிலிருந்து எம்மை விடுதலையாக்கவே பாடுகளின் வழியைத் தேர்ந்தெடுத்தார்.

இறைவனுக்காக அனைத்தையும் இழப்பதே பிறரன்பின் உயர்ந்த அழைத்ததாதலுடன் கிறிஸ்துவினுள எமது அடையாளத்தை இனம்காணும் வழியாகிறது. சிலுவை வெற்றிப் பாதை ஆவதுடன் தவக்காலத்திலிருந்து உயிர்ப்புகாலம் வரை வாழ்வு - மரணம் அடிமையாகின்றது. அதனால் அது அன்புக்கான வழியே தவிர சுயநலத்தின் வழியல்ல. சிலுவைப் பாடுகள் இன்றி உயிர்ப்பு இல்லை அதனால் இத்தவக்காலத்திலும் உயிர்ப்பு விழாவிலும் கிறிஸ்தவ வளர்ச்சிக்கான வழியைக் கண்டு அதற்கு பதிலளிப்பது சிலுவையின் வழியாகும். இயேசுவை நெருங்க அவரின் வேண்டுகோள் “என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்” (மாற் 8:34) என்றார்.

சிலுவையின் அடையாளம் முடிவில்லாத அன்பு, விடுதலையின் மகிழ்ச்சியுமாகும். புனித பவுல் “கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன். எனவே இனி வாழ்பவன் நான் அல்ல, கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்.” (கலா 2:19-20) மீண்டும் “நானோ நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் சிலுவையை அன்றி, வேறு எதைப்பற்றியும் ஒருபோதும் பெருமை பாராட்ட மாட்டேன். அதன் வழியாகவே, என்னைப் பொறுத்தவரையில், உலகம் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது. உலகைப் பொறுத்தவரையில் நானும் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன்” (கலா 6:14) என்றார்.

அன்புக்குரிய சகோதர சகோதரிகளே, திருச்சபை எந்நேரமும் சிலுவையிலுள்ள கிறிஸ்துவைப் பின்பற்றவே அழைக்கின்றது. சிலுவை என்னை மாற்றி, கிறிஸ்து தன்னை அர்ப்பணித்ததன் ஊடாக வெளிப்படுத்தினார். ஓய்வுபெற்ற திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பரின் கூற்றுப்படி “சிலுவையை ஏற்றுக்கொள்வது என்பது கிறிஸ்துவை பின்செல்ல உட்பிரவேசிப்பதாகும்” முழுமையான மாற்றத்திற்குள்ளாவதாகும். (“நசரேத்தூர் இயேசு”, இக்னேஷஸ் அச்சகம், புனித பிரான்சிஸ்கோ 2011, பக் 40)

அதனால் தவக்காலமும் உயிர்ப்பு விழாவும் உறுதியாக எமது விசுவாசத்தையும். நிலையான வழியில் கிறிஸ்துவினூடான முழுமையான விடுதலையும் மகிழ்ச்சியும் பெறும் காலமாகும். இதுவே எமது உயிர்ப்பின் வேண்டுதலாகும். இக்கண்ணோட்டத்தில் மகிழ்ச்சி நிறைந்த விடுதலையின் அனுபவத்தில் உயிர்ப்பு விழாவைக் கொண்டாட வாழ்த்துகின்றேன்.

**அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை**
**கொழும்பு உயர்மறைமாவட்டம் பேராயர்**



ஞான ஒளி
GNANA OLI
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
14 சித்திரை, 2019 ஞாயிற்றுக்கிழமை.

# ஒரு கிறிஸ்தவனின் வாழ்வு உயிர்ப்பிலேதான் தொடங்குகின்றது.

தவக்கால திருப்பயணம், சிலுவைப்பாதைகள், தவக்கால தியானம், ஒறுத்தல் முயற்சிகள், போன்ற சிறப்பு நிகழ்வுகளில் பக்தியோடு பங்குகொண்டு தவக்காலத்தை ஒரு பொருள் பொதிந்த காலமாகக் கடைப்பிடித்து இறையேசுவின் உயிர்ப்பை கொண்டாடும் உங்கள் அனைவருக்கும் என் நல் வாழ்த்துக்கள்

உயிர்ப்பு என்பது நம்பிக்கை, அன்பு, மகிழ்ச்சி நிறைவாழ்வு என்பதை எடுத்துக் காட்டுகிறது. ஒரு கிறிஸ்தவனின் வாழ்வு உயிர்ப்பிலே தான் தொடங்-குகின்றது. நாம் ஒவ்வொருவரும் நிலைவாழ்வைப் பெறவேண்டும், காணவேண்டும் என்பதற்காகவே, தனது உயிரையே பலியாக்க கொடுத்தற்காக இறைவன் இவ்வுலகிற்கு வந்தார். இயேசு இவ்வுலகத்திற்கு வந்த நாளை நினைவு கூறி கொண்டாடும் கிறிஸ்மஸ் விழா உற்சாகமான கொண்டாட்டமாக இருந்தாலும், இயேசுவின் உயிர்ப்பு பெருவிழாவே, கிறிஸ்தவர்களின் மாபெரும் விசுவாச விழாவாகும். இதை புனித பவுலடியார் ‘கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட வில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும், நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும், பொருளற்றதாயிருக்கும். (1கொரி 15:14) என்று கூறுகின்றார்.

எனவே கிறிஸ்தவ எதிர்நோக்கு, இறை நம்பிக்கை அன்பு ஆகியவை கொண்டே வாழ்வின் அடித்தளமான உயிர்ப்பு விழா இருக்கிறது.

இன்றைய உலகில் காணப்படும் ஏழ்மை, வறுமை, பசி துன்பம், தீயசக்தி, போதைபொருள் பாவனை அதிகரிப்பு, போன்ற அவநம்பிக்கையூட்டும், இருளான சூழ்நிலைகளில் நாம் எழுந்து, நம்பிக்கையூட்டும் இயேசுவின் உயிர்ப்பில் பங்கு கொண்டு அதை மற்றவர்களுக்கு எடுத்து செல்லும் பணியாளர்கள் ஆவோம்.

அத்தோடு இம்மாதம் தமிழ் சிங்கள புத்தாண்டை கொண்டாடும் எமது சகோதர, சகோதரிகளோடு இணைந்து அவர்களது மகிழ்ச்சியில் நாமும்பங்கு கொள்வோம். இந்நாளில் இறைவன் உங்களை சிறப்பாக ஆசீர்வதித்து பெருகிடும் நலன் நிறை வளங்களுக்கும் பெற்றிருக்கும், மகிழ்விற்கும் ஒரு புதிய தொடக்கமாக இந்த உயிர்ப்பு காலமும், பிறக்கும் புதுவருடமும் அமைவதாக.

**மகிழ்ச்சி நிறைந்த உயிர்ப்பு, புது வருட வாழ்த்துக்கள்**

**இறையாசீருடன் ஆசிரியர்**



# குருத்து ஞாயிறு





ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பாலஸ்தீன நாட்டில் எருசலேம் வீதியில் இயேசு ஊர்வலம் வந்தார். இன்று எமது நாட்டில் நடக்கும் அரசியல் போராட்ட ஊர்வலத்திற்கும், எருசலேம் நகர ஊர்வலத்திற்கும் பாரதூரமான வித்தியாசம் உண்டு. மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேற்றுமை எனலாம். எருசலேம் நகர வீதியில் வந்த இயேசு பதவி ஆசையற்றவர், சாந்தமும், தாழ்ச்சியும் உள்ளவர். ஒருவரையும் அடக்கி ஆழாதவர், தன் பணியை வேறு விதத்தில் பயன்படுத்திக் கொள்ளாதவர் நேர்மையானவர், பாவ நிலையணுகாதவர். இந்த பவனியில் இயேசு அரசர் கழுதையின் மீது ஏறி பவனி வந்தார். யூதர்களின் புளியாத அப்பத் திருவிழாவாகிய பாஸ்காவிற்காக உலகின் எட்டுத்திசைகளிலிருந்தும், எருசலேமுக்கு வந்த யூதர்கள் அனைவரும் கலந்துக் கொண்டனர். இறை அரசு திறக்கப்பட்டதன் அடையாளமாக இயேசுவின் குருத்தோலைப் பவனி தந்தையின் விருப்பத்தை மூன்றாண்டுகள் முழுமூச்சாகப் போதித்து இறையாட்சிப் பணிபுரிந்த இயேசு மக்களாலேயே பவனியாக அழைத்து வரப்படுகின்றார்.



## கழுதைக் குட்டியின் மேல்

இன்றைய அரசியல், மத தலைவர்கள்போல் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் அமர்ந்து மக்களை நோக்கி கைகளை அசைத்து போலியான புன்னகை உதிர்த்து ஆணவத்தோடு இயேசு வலம் வரவில்லை. ஏழைகளுக்காக, ஒடுக்கப்பட்டவர்களுக்காக வாழ்வை அர்ப்பணித்தவர். சாதாரண மக்கள் பயணத்திற்காக பயன்படுத்தும் கழுதைக் குட்டி மேல் அமர்ந்து அமைதியாக சென்றார். அன்பிற்காகவும், சமாதானத்திற்காகவும் தன்னை அர்ப்பணித்தவர். சமாதானத்தையும் சாந்தத்தையும், குறிக்கும் கழுதைக் குட்டியின்மேல் பவனி வருகின்றார்.

## பாடுகளை நோக்கி,

எருசலேம் நோக்கிய இயேசுவின் பயணம் பாவத்தை வென்று பாசத்தை உருவாக்கும் ஊர்வலம்.

- ❖ பாடுகளை மூன்று முறை அறிவித்தார்.
- ❖ பாஸ்கா உணவை உண்ண ஆசைமேல் ஆசையாய் இருந்தவர்
- ❖ இறுதிவரை தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற இலட்சியம் கொண்டிருந்தவர்.
- ❖ இப்பயணத்தில் உடல் தளர்ந்தாலும், உள்ளம் தளராமல் மீட்பை தரும் புனித பயணத்தை மேற்கொள்ள தயாராய் இருந்தார்.

## நாமும் குருத்து ஞாயிறில் பங்கெடுப்போம்

குருத்து ஞாயிறு இயேசுவை போற்றிப் புகழ்ந்து ஓசான்னா பாடி அவருக்கு புகழ்சாற்றும் விழா மட்டும் அன்று. இயேசுவின் கொள்கைகளை நமதாக்கி பிறரின் புகழ்ச்சிக்கும் பெருமைக்கும் அடி பணியாமல், இயேசுவின் பாதையில் பயணத்தை தொடர நமக்கு விடுக்கும் அழைப்பு. ஒன்று சேர்ந்து ஓசான்னா பாடிவிட்டு செல்வதல்ல, இயேசுவோடு இணைந்து பாடுகளின் பாதையில் பயணம் செய்து ஓசான்னா பாடுவோம். இயேசுவைப் பின் தொடர்வோம்.

## உண்மை உறைக்கும்

கமிலஸ்







# பலரின் மீட்புக்காகப் பலியாகும் உடல்!




# பெரிய வியாழன்

இன்றைய தினம் 'பெரிய வியாழன்' என்று அழைக்கப்படுவதற்கு ஒரு சில முக்கியக் காரணங்கள் உண்டு. இன்றைய இரவு இயேசு தனது இறுதி மீட்புச் செயல்பாட்டிற்காக தன்னையே கையளித்த இரவு, யூதர்களின் கையில் தன்னை கையளிக்கும்முன் ஆண்டவர் இயேசு ஒருசில முக்கிய கட்டளைகளையும், கிறிஸ்தவத்தின் அடிப்படை நிகழ்வுகளையும் ஏற்படுத்திச் சென்றார். இக்கட்டளைகளும், இந்நிகழ்வுகளுமே கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக இயேசு கிறிஸ்துவை, அவரது மறைபொருளைப் பிரசன்னப்படுத்தி கடந்த கால வரலாற்றை நிகழ்கால நிகழ்வுகளாக ஆக்கிக் கொண்டு வருகின்றன.

## புதிய கட்டளை

ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்துவது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்து-



ங்கள்' (யோவா 13:34) என்ற வார்த்தைகளில் இயேசு தமது புதிய கட்டளையை வழங்கியுள்ளார். அன்புக் கட்டளை மானிட சமூகத்திற்குப் புதிதல்ல. இயேசுவின் காலத்திற்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஹமுராபி என்ற சட்ட வல்லுநர் அன்புச் சட்டத்தை மானிட சமூகத்திற்கு அறிமுகப்படுத்தியுள்ளார். அதற்கடுத்து, மோசே முந்தைய அன்புச் சட்டத்தைச் சற்று மாற்றி இஸ்ரயேல் மக்களுக்கு வழங்கினார். இவர்களுக்குப் பிறகு இயேசு தனது அன்புச் சட்டத்தை தமது சீடர்களுக்கு தந்தார்.

இயேசுவின் அன்புக் கட்டளை 'புதிய கட்டளை' என்று அழைக்கப்பட முடியுமா என்பது இங்கே எழும்கேள்வி. தமது கட்டளையை வழங்கும்போதே அது புதிய கட்டளை என்ற உணர்வோடுதான் இயேசு வழங்கியுள்ளார். தம்மை அன்பு செய்பவருக்கே அன்பு, தம்மை அன்பு செய்யும் அளவுக்கே அன்பு என்ற பழைய சட்டங்களை முற்றிலுமாக மாற்றியதில் தான் ஆண்டவர் இயேசுவின் அன்புக் கட்டளையின் புதிய தன்மை அடங்கியுள்ளது. 'நான் உங்களை அன்பு செய்வதுபோல' என்பதுதான் இயேசுவின் அன்புச் சட்டத்தின் அடிப்படை. தகுதியற்ற நபர்களுக்காய் தன்னை இழப்பதே அன்பு என்பதே இயேசு வாழ்ந்து காட்டிய வாழ்வியல், எதிர்பார்ப்பற்ற, தன்னை மறந்த தியாக அன்பே அன்பு. அதுவே இயேசு வழங்கிய அன்புச் சட்டம். இவ்வாறு தன்னலமற்ற அன்பு வாழ்விலிருந்து மட்டுமே இயேசுவின் சீடர்களை இனம் கண்டுகொள்ள முடியும் என்று இயேசுவே வலியுறுத்திக் கூறியுள்ளார் (யோவா



13:35) இன்றைய தினம், உலகில் வாழும் அத்தனை கிறிஸ்தவர்களும் இயேசுவின் அன்புச் சட்டத்தை ஆடையாக அணிந்துகொள்ள அழைக்கப்படுகிறார்கள். இதிலிருந்தே பிறர் இவர்களை இயேசுவின் சீடர்களென இனம் கண்டு கொள்வர். 'அன்பு என்றால் என்னவென்று அவரைக் கேட்டுப் பாருங்கள்' (சிலுவையில் அறையுண்ட இயேசுவை) 'அத்தனையும் தருவதுதான் அன்பு' என்று சொல்வார்.

## பாதம் கழுவும் நிகழ்ச்சி:

பெரும்பாலான மதங்களில் பாதம் கழுவுதல் ஒரு தூய்மைச் சடங்காகப் பின்பற்றப்பட்டு வருகிறது. இத்தகைய தூய்மைச் சடங்கு யூத மதத்திலும் காணப்பட்டது. இயேசுவின் பாதம் கழுவும் நிகழ்ச்சி அத்தகைய சமயச் சடங்காக நிகழ்த்தப்படவில்லை. தனது சீடர்களின் வாழ்க்கை முறையாக அமையவேண்டிய அடிப்படைச் செயல்பாடு என்பதே இயேசு உணர்த்த விரும்பும் செய்தி. இதற்காகவே இயேசு தாம் அவர்களை விட்டுப்பிரியும் முன்னர் இதனைச்செய்து காட்டினார்.

இதற்கு மற்றொரு காரணமும் உண்டு. இயேசுவின் பணி வாழ்வின்போது இயேசு தமது வாழ்வின் மையச் செய்தியாகிய பணிபுரிதலை பல்வேறு சூழல்களில் சுட்டிக்காட்டியுள்ளார். தாம் தலைவர் அல்லர், பணியாளர் என்பதையும் பணிவிடை பெற அல்ல, பணிவிடை செய்யவே தாம் வந்தது என்பதையும், தனது சீடர்களும் மானுடத்தின் பணியாளர்களாக செயல்பட வேண்டும் என்பதையும் (மத் 11:35-43) கோடிட்டுக் காட்டியுள்ளார். இருப்பினும் சீடர்கள் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. பெத்தானியாவிலிருந்து எருசலேம் நோக்கி இயேசு மேற்கொண்டிருந்த இறுதி யாத்திரையின்போது இயேசுவின் சீடர்கள் 'தங்களில் பெரியவன் யார்?' என்று விவாதித்துக் கொண்டு வந்தார்கள். தனது பல்வேறு போதனைகளாலும், தனது மையச்செய்தியைச் சீடர்கள் புரிந்து கொள்ளவில்லையே என்று அங்கலாய்த்த இயேசு பாதம் கழுவும் நிகழ்ச்சி வழியாக தனது மையச்-செய்தியாகிய தொண்டு புரிதலை தனது சீடர்களின் மனதில் ஆழமாகப் பதிக்க முயற்சி செய்தார்.

புறவினத்தாரிடையே தலைவர்கள் என்பவர்கள் தங்கள் ஆளுமைக்கு உட்பட்டவர்களை அடக்கி ஆளுகிறார்கள். ஆனால் இயேசுவின் சீடர்களின் 'தலைமை' என்பதற்கு 'தொண்டர்' என்று மட்டும் பொருள்படும். 'நீங்கள் என்னைப் போதகர் என்றும், ஆண்டவர் என்றும் அழைக்கிறீர்கள். நீங்கள் அவ்வாறு அழைப்பது முறையே நான் போதகர் தான், ஆண்டவர் தான். ஆகவே ஆண்டவரும், போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்' (புனித யோவான் 13:12-14)

## குருத்துவ தினம்:

இன்று உலகம் முழுவதும் குருக்கள் தங்கள் குருத்துவ தினத்தைக் கொண்டாடி மகிழ்கின்றார்கள். திருத்தந்தையும் குருக்கள் தினத்திற்காக சிறப்புச் செய்தியை வழங்கியுள்ளார். புதிய ஏற்பாட்டுக் குருக்கள் பெருங்குருவாம் இயேசுகிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்கேற்கிறார்கள். இயேசுகிறிஸ்து குருவோ, குருத்துவ மரபில் பிறந்தவரோ அல்லர். அவர் யூத மரபில் பிறந்த பொதுநிலையினர். இருப்பினும் எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் அவரை குரு, பெருங்குரு (தலைமைக்குரு) என்று அழைக்கிறது. (எபி. 7:15-8:13)

இயேசுவின் குருத்துவம் பழைய ஏற்பாட்டுக் குருத்துவத்திலிருந்து வேறுபட்ட புதிய ஏற்பாட்டுக் குருத்துவம். பழைய ஏற்பாட்டிலோ பலிபொருள் வேறு, பலியை ஒப்புக்கொடுக்கும் குரு வேறு. ஆனால் புதிய ஏற்பாட்டிலோ பலிபொருளும், பலியை ஒப்புக்கொடுக்கும் குருவும் ஒன்றேயாகிறார். தம்மையே தமது விண்ணகத் தந்தைக்கு ஏற்ற பலிப்பொருளாக ஒப்புக் கொடுத்தலில்தான் இயேசுவின் குருத்துவம் வேறுபட்டதாகிறது. சிறப்புத் தன்மை கொண்டதாக மாறுகிறது. தமது குருத்துவ தினத்தைக் கொண்டாடும் குருக்களின் மகிழ்ச்சியும் அடையாளமும் இதிலே அடங்கியிருக்கவேண்டும். தாழ்த்தப்பட்டோரின் வாழ்வுக்காக, மானிட மீட்புக்காக இயேசு போன்று பலிபொருளாக ஒவ்வொரு நாளும் மாறுவதே குருத்துவ வாழ்வு. பணிவிடை பெற அல்ல, பணிவிடை புரியவும் பிறருடைய மீட்புக்காகப் பலியாகுவதும் குருத்துவம். அத்தகைய குருக்களுக்காகச் செபிக்க திருச்சபை அழைக்கிறது.

## நற்கருணை நிறுவனம்:


இவ்விரவில் மாபெரும் நிகழ்வு நற்கருணை நிறுவனமாகும். தான் அன்பு செய்தவர்களோடு எந்நாளும் இருக்க விரும்பிய இயேசு தன்னையே நற்கருணையில் விட்டுச்சென்றுள்ளார்.

இயேசுவின் நற்கருணை இயேசுவை உண்மையாகவே வரலாற்றில் பிரசன்னப்படுத்தி, திருச்சபையின் இயல்புக்கும், இருப்புக்கும் காரணத் தன்மையை வழங்குகிறது. இயேசு காட்டிக்கொடுக்கப்பட்ட இந்த இரவில் அப்பத்தையும், இரசத்தையும் எடுத்து 'இது என் உடல், இது என் இரத்தம்' என்று சொல்லி 'இதை என் நினைவாகச் செய்யுங்கள்' என்று பணித்துள்ளார் (மாற் 14:22-26, மத் 26:26-30, லூக் 22:15-21, 1கொரி 11:23-25)

கத்தோலிக்கத் திருச்சபை தனது வாழ்வின் மையமாக நற்கருணையைக்....

தொடர்ச்சி 15ம் பக்கம்..

ஞான ஒளி
GNANA OLI
14 சித்திரை 2019
உயிர்ப்பு ஞாயிறு சிறப்பிதழ்







# சிலுவையிலிருந்து பேசுகிறேன்

1. உன்னையே மறுத்து, உன் சிலுவையைச் சுமந்து-கொண்டு இயேசுவைப் பின்தொடர்வாய் (மத் 16:24, லூக் 9:23) இந்த அறிவுரை பலருக்குக் கடினமாகத் தோன்றுகிறது.

2. ஆனால் சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு அகன்று போங்கள்.... முடிவில்லாத நெருப்புக்குள் செல்லுங்கள் (மத் 23:41) என்ற இறுதிச் சொல்லை கேட்பது அதைவிடக் கடினமாக இருக்குமல்லவா?

3. ஏனெனில், இப்போது சிலுவையின் சொல்லை மகிழ்ச்சியுடன் கேட்டுப் பின்செல்கின்றவன், அப்போது முடிவிலா அழிவின் சொல்லைக் கேட்டு அஞ்சமாட்டான்.

4. ஆண்டவர் நீதி வழங்க வரும்போது இந்தச் சிலுவைச் சின்னம் விண்ணிலிருக்கும்.

5. அப்போது சிலுவையில் அறையப்பட்டவரை ஒத்த வாழ்வு வாழ்ந்த சிலுவையின் எல்லா அடியார்களும் நடுவர் கிறிஸ்துவை மிகுந்த நம்பிக்கையுடன் அணுகுவார்கள்.

6. எனின், விண்ணக அரசுக்கு அழைத்துச் செல்லும் சிலுவையை சுமக்க ஏன் அஞ்சுகிறாய்?

7. சிலுவையில் மீட்பு, சிலுவையில் வாழ்வு, சிலுவை-யில் பகைவரிடமிருந்து காப்பு; சிலுவையில் விண்-ணக இனிமையின் ஊற்று, சிலுவையில் மனத்தின் வலிமை, சிலுவையில் அகத்தின் மகிழ்வு, சிலுவை-யில் பண்பின் உயர்வு, சிலுவையில் புனிதத்தின் நிறைவு.

8. சிலுவையிலன்றி ஆன்ம ஈடேற்றமும் அழியா வாழ்வில் நம்பிக்கையும் இல்லை.

9. எனவே, நீ சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்செல் அப்போது நீ அழியா வாழ்வில் புகுவாய்.

10. ‘சிலுவையைத் தாமே சுமந்துகொண்டு முன்சென்றார்’ (யோவா 19:17) நீயும் உனது சிலுவையைச் சுமந்து சிலுவையில் உயிர்கொடுக்க விரும்புவாய் என்பதற்காக, உனக்காகச் சிலுவையில் உயிர் துறந்தேன்.

11. ஏனென்றால், என்னுடன் உயிர் நீத்தால் நீயும் என்னுடன் வாழ்வடைவாய்; என்னுடைய துன்பத்தில் தோழமை கொண்டால் மகிமையிலும் துணைவனாய் இருப்பாய்.

12. இதோ! சிலுவையில் அனைத்தும் அமைந்திருக்கிறது; இறப்பதில் முற்றும் இடங்கியிருக்கிறது வாழ்வுக்கும், உண்மையான மன அமைதிக்கும், தூய சிலுவையின் அன்றாட ஒறுத்தலின் வழியைத் தவிர வேறு வழியில்லை.

13. நீ விரும்பும் இடமெல்லாம் சென்றாலும், விரும்பும் அனைத்தையும் தேடினாலும், தூய சிலுவையின் வழியைவிட உயர்ந்த வழியை விண்ணிலோ, பாதுகாப்பான வழியை மண்ணிலோ காண-மாட்டாய்.

14. உனது கருத்திற்கும் விருப்பத்திற்கும் ஏற்ப அனைத்தையும் திருத்தி, ஒழுங்கு செய்துபார். நீ விரும்பினாலும், வெறுத்தாலும் அப்போது கூட கொஞ்சம் சகித்துத்தான் ஆக வேண்டும் என்பதை அறிந்துகொள்வாய். இவ்வாறு சிலுவைக்கு ஒருபோ-தும் தப்ப இயலாது.

15. ஏனெனில், ஒன்றில் நீ உடல் வேதனையை அனுபவிக்க வேண்டும். அல்லது, மனவருத்தத்தைத் தாங்கவேண்டும்.

16. சிலவேளை நீ இறைவனால் கைவிடப்படலாம்; சிலவேளை அயலவரால் துன்புறுத்தப்படலாம். ஆனால் இவற்றிற்கு மேலாக, உனக்குப் பெரிதும் நீயே பளுவாயிருப்பாய்.

17. மாற்று மருந்தாலும், ஆறுதலாலும் அதிலிருந்து விடுதலை பெற முடியாது. அதன் பளுவை உன்னால் குறைக்க இயலாது. மாறாக, இறைவன் விரும்பும் வரை நீ பொறுத்தாக வேண்டும்.

18. ஏனென்றால், ஆறுதலின்றித் துன்பத்தைத் தாங்க நீ கற்க வேண்டும்; அவருக்கு நீ முற்றும் பணிந்துகொடுக்க வேண்டும்; துன்பத்தால் மிகுந்த தாழ்ச்சியுற வேண்டும் என்று இறைவன் விரும்பு-கிறார்.

**நீ சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்செல் அப்போது நீ அழியா வாழ்வில் புகுவாய்.**

19. நான் அனுபவித்தவை போன்ற துன்பங்களை அனுபவிப்பதற்கு எவனுக்கு வாய்ப்புக் கிடைத்த-தோ, அவனே அவற்றை உளமார உணரமுடியும்.

20. எனவே, சிலுவை என்றும் தயாராக இருக்கிறது; உன்னை என்றும் எதிர்நோக்கி இருக்கிறது.

21. நீ எங்கு ஓடினாலும் தப்பிவிட முடியாது. நீ எங்குச்சென்றாலும் உன்னை உன்னுடன் கொண்டு-செல்வதால் அங்கு உன்னையே நீ காணத் தவறமாட்டாய்.

22. நீ மேலே திரும்பினாலும், கீழே திரும்பினாலும், வெளியே திரும்பினாலும், உள்ளே திரும்பினாலும், எங்கும் சிலுவையைக் காண்பாய். நீ உள்ளத்தில் அமைதி பெறவும், அழியா முடியைப் பெறவும் விரும்பினால் நீ எங்கும் பொறுமையைக் கடைப்-பிடிப்பது அவசியம்.

23. நீ விருப்புடன் சிலுவையை ஏந்திச் சென்றால், நீ எதிர்பார்க்கும் முடிவுக்கு, அதாவது, துன்பம் முற்றுப்பெறும் இடத்திற்கு - (இங்கே அதற்கு முடிவில்லாதிருந்தாலும்) - அது உன்னை ஏந்திச் செல்லும், கூட்டிச் செல்லும்.

24. நீ வெறுப்புடன் சிலுவையைத் தாங்கிச்சென்றால், அதை உனக்குப் பளுவாக்கி, உன்னையே வருத்திக்-கொள்கிறாய், எனினும், நீ அதைத்தாங்கித்தான் ஆகவேண்டும்.

25. நீ ஒரு சிலுவையை அருவருத்துத் தள்ளினால், மற்றொன்று வந்தடைவது உறுதி. பின்னது ஒருவே-ளை அதிகப் பளுவானதாய் இருக்கலாம்.

26. அழியும் மனிதர் எவரும் தப்ப முடியாத ஒன்றிற்கு நீ தப்பிவிட எண்ணுகிறாயா? உலகில் வாழ்ந்த புனிதரில் யாராவது சிலுவையும், துன்பமுமின்றி வாழ்ந்ததுண்டா?

27. ஏனெனில், உங்கள் ஆண்டவராகிய நான்கூடத் வாழ்ந்த நாட்களில் ஒரு மணி நேரமாவது பாடுகளின் வேதனையின்றி இருந்ததில்லை. மெசியா பாடுபட்டு இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார். இவ்வாறன்றோ மகிமையடைய வேண்டும்? என அவரே மொழிந்தார் (லூக் 24:26,46)

28. அப்படியானால், நீ தூய சிலுவையின் வழியான இந்த அரச வழியைவிட்டு, வேறு வழியைத் தேடு-வதன் காரணம் என்ன?

29. என் வாழ்வு முழுவதும் சிலுவையும் துன்பக்களமுமாக இருந்தது; ஆனால், நீ அமைதி-யையும், மகிழ்ச்சியையும் தேடுகிறாயா?

30. இடுக்கண்களைத் தாங்குவதைவிட்டு, வேறொன்-றைத் தேடும்போது நீ தவறு புரிகிறாய், பிழை செய்கிறாய்; ஏனென்றால், அழியும் இந்த வாழ்வெ-ல்லாம் கடுந்துயரத்தல் நிறைந்திருக்கிறது; சிலு-வைகளால் சூழப்பட்டிருக்கிறது.

31. ஒருவன் எவ்வளவு பண்பில் ஓங்கி வளர்ந்திருக்கிறானோ, அவ்வளவு பளுவான சிலுவைகளை அவன் கண்டடைவான். ஏனென்றால், அவனது அன்பின் அளவுக்கு - ஏற்ப பிரிவின் வேதனையும் பெருகுகிறது.

32. என்றாலும், இப்படிப் பலவிதத் துயரம் அனுபவி-க்கும் ஒருவனுக்கு ஆறுதலின் களிப்பு அற்றுப்-போவதில்லை. ஏனென்றால், சிலுவையைத் தாங்கிக்கொள்வதால் தனக்கு மிகுந்த பலன் சேர்கிறது என்பதை அவன் உணர்கிறான்.


33. மற்றும், அவன் அதற்கு விருப்புடன் பணியும்போது துன்பத்தின் பளு அனைத்தும், தேவ ஆறுதலின் நம்பிக்கையாக மாறிவிடுகிறது.

34. துன்பத்தால் எவ்வளவு உடல் வாட்டப்படுகிறதோ, அவ்வளவு அக அருளால் உள்ளம் ஊக்கம-டைகிறது.

35. சிலவேளை என் சிலுவையை ஒத்திருக்க வேண்டும் என்ற அவா அவனுக்கு எவ்வளவு மிகுதியென்றால், துன்பம், எதிர்ப்பு இவற்றை அணைப்பது கூட, அவனுக்கு ஆறுதல் தருகிறது; துன்பமும் துயரமும் இல்லாதிருப்பதை அவன் விரும்புவதில்லை. ஏனென்றால், எத்தனை இன்னல்களை கொடிய இன்னல்களை இறைவனுக்காகத் தாங்க முடிகிறதோ, அவ்வளவு அவருக்கு உகந்தவனாக முடியும் என்று அவன் நம்புகிறான்.

தொடர்ச்சி 15ம் பக்கம்..









# கல்வாரி நாயகனின் சிலுவை மொழிகள்

இறைவா என் வாழ்வில் உம்மை விட்டுப் பிரிந்து கால்போன போக்கில் வாழ்ந்தேன். இவ்வாழ்வை விட்டுவிட்டு இப்பரிசுத்த வாரத்தில் உம்மை நோக்கி திரும்பவும், கல்வாரி மலையில் நீர் மொழிந்த இறுதி வார்த்தைகளின் பொருளை உணர்ந்து வாழ விரும்புகின்றேன்.

1. தந்தையே, எங்களை மன்னியும், ஏனெனில் நாங்கள் செய்வது இன்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை. (லூக் 23:34)
2. ‘நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்லுகிறேன் (லூக் 23:43)
3. ‘அம்மா, இவரே உன் மகன், இவரே உன் தாய் (யோவா 19:16)
4. ‘என் இறைவா, என் இறைவா, ஏன் என்னை கைவிட்டீர்’ (மாற் 15:35, மத் 27:46)
5. தாகமாயிருக்கிறது (யோவா 19:28)
6. ‘தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கின்றேன்’ (லூக் 23:46)
7. எல்லாம் நிறைவேறிற்று’ (யோவா 19:30)

இயேசுவின் இறுதி நேரத்தில் இந்த ஏழு வார்த்தைகள், நமக்கு கற்றுத் தரும் பாடங்கள்.

இயேசு தன் தந்தையின் மீதுள்ள நம்பிக்கையைத் துளிக்கூட இழக்கவில்லை. தன்னை சிலுவையில் அறைந்தவர்களை மன்னித்து இறுதிவரை தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றி நமக்கு நிலைவாழ்வை தந்தார்.

துன்பத்தை அனுபவிக்காத மனிதன் யாருமில்லை. துன்பத்திற்கு முன்னால் நாம் அனைவரும் சமமே. நாம் அதை சந்திக்கின்ற விதம்தான் வித்தியாசமானது. துன்பத்தில் இருந்து நாம் மீள நமது சிறந்த முன்மாதிரி இயேசு கிறிஸ்துவே.

நமக்கு துன்பங்கள் வரும்போது அதனால் ஏற்படுகின்ற தாக்கங்கள், வேதனைகள், அந்நேரத்தில் இறைவனை நோக்கி கதறுகின்றேன். ஏன் ஆண்டவரே. ஏன் என்னை கைவிட்டீர், உம்மை நோக்கி மன்றாடினேனே என்று கதறுகின்றோம். கதறுவதோடு நின்று விடுகின்றோம். இதற்கு பின்னணி; கடவுளின் திருவுளம் என்ன என்பதை கண்டுணர மறுக்கின்றோம். எமக்கு வந்த சிலுவைகளின் பின்னணி தான் உயிர்ப்பு உண்டு என்பதை மறந்து விடக்கூடாது.

என்னை ஏளனம் செய்தார்கள், எனக்கு எதிராக சதி செய்தார்கள், வீண் பழியும் சுமத்தினார்கள். என் பெயரைக் கெடுத்தவர்கள், எனது முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போட்டவர்கள், இவர்களை மன்னித்து வாழ்கின்றோனா? இவ்வளவு சுமைகளை தாங்கி கிறிஸ்தவர்களாக வாழ்ந்து இருக்கிறோம். இயேசுவுக்காக நான் என்ன செய்திருக்கிறேன்? சிந்திப்போம்.

இறைவா, துன்பத்தின் உச்சத்தில், நாங்கள் கதறி அழும்போது, துவண்டு விழும்போது நம்பிக்கை இழக்கும்போது உம்மை நினைவுக் கூறுகிறேன். பழகியோர், வீண் பழி சுமத்தும்போது, துரோகத்தால் துவழும்போது, நம்பி இருந்தோர் நசுக்கும்போது நண்பர்களே, என்னைச் சிலுவையில் அறையும் போது மாறாத அன்புடன் மன்னிக்க மனம் தாரும்.

இறைவா, கால்கள் தடுமாறும்போது, வழியெல்லாம் இருள் சூழும்போது கதவுகள் சாத்திடும்போது என் பாதையாக ஏணியாக வாரும் இயேசுவே.

இறைவா எல்லாரும் சிதைத்தாலும், என்சக்தி மறைந்தாலும், நீரே என் பலம், உம்மால் எல்லாம் கூடும் என்று உணரச்செய்தருளும் இயேசுவே. சிலுவையில் தொங்கும் செம்மறியே, நீர் மொழிந்த இந்த ஏழு வார்த்தைகள் என் வாழ்க்கைப் பாடமாக தந்து எந்த சூழ்நிலையிலும், அசைக்க முடியாத நம்பிக்கையுடன் துன்பங்களை துணிவுடன் ஏற்கவும், பகைவரையும் மன்னிக்கவும், எம்மை நாடி வருவோர்களுக்கு ஆறுதல் கூறி தேற்றவும் மன உறுதியுடன் செயலாக்கத்தைத் தாரும்.



# தாகமாய் இருக்கின்றேன்

இறைவன் மனிதனாய் இவ்வுலகில் பயணித்த காலம் முப்பத்து மூன்று ஆண்டுகள். வார்த்தையாய் பல்வேறு பரிமாணங்களில் அகிலமெங்கும் பயணித்த காலம் அளவே இல்லாதது. ஆனால் நாம் இறை பாடுகளை நினைத்து, அவரோடு பயணிக்கும் காலம் வெறும் நாற்பது நாட்களா? இயேசுவின் குரல் அழுகுரலா? அல்லது ஆனந்த குரலா? கிறிஸ்துவின் உயிர்ப்பு விசுவாசத்தின் பிரதிபலிப்பா? விடை காண்போமா?

## தவக்கால தானம்.

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து சிலுவையில் கடைசியாக மொழிந்த ஐந்தாவது வார்த்தை ‘தாகமாய் இருக்கிறேன்’ (யோவா 19:28) பலரால் கசையடிப்பட்டு அவமானப்பட்டு, சிலுவை சுமத்தப்பட்டு, கல்வாரி மலையினை அடைந்த இறைமகன் இயேவுக்கு நிச்சயம் தாகம் உண்டாயிருக்கும். எனினும் இறைச்சித்தத்தையும் இறைவெளிப்பாட்டையும் நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். கெத்சமனி தோட்டத்தில் இரத்த வியர்வை வியர்த்த போது மொழிந்த வாக்குகள் ‘என் தந்தையே, முடிந்தால் இத்துன்பக் கிண்ணம் என்னை விட்டு அகலட்டும்’ (மத் 26:39)

தந்தை எனக்கு அளித்த துன்பக் கிண்ணத்தில் இருந்து நான் குடிக்காமல் இருப்பேனோ? (யோவா 18:18) என்று மொழிந்த இறைமகன் மனித இயல்பினால் கூறிய வார்த்தைகள். ‘எனினும் என் சித்தமல்ல உம் சித்தப்படியே ஆகட்டும்’ (மத் 26:39) என்று கீழ்ப்படிதல் பண்பையும், பிதாவாகிய இறைவன் தமக்கு உண்டாக்கின பணியையும் நிறைவேற்றிட இறை மனித துன்பக் கிண்ணத்தில் பருகுகிறார்.

## தாகம் – அர்த்தம்

இயேசுவின் தாகம் குளிர்ந்த நீரால் தணிக்க முடியாதது. பின் எவ்வாறு நாம் இயேசுவின் தாகத்தை தணிப்பது? சற்று விந்தை மிக்க செயல். அவர் தாகமாய் இருக்கிறது என்று சிலுவையில் கூறியது என்னவென்று காண்போம். தம் தந்தை தமக்காக ஏற்பாடு செய்திருந்த துன்பக் கிண்ணத்திலிருந்து பருகினார். எனினும் அவர் மானுட குலத்துக்காக, மனித இனத்திற்காக, தம் அன்பு சொந்த மக்களுக்காக தன் உயிரை மாய்த்துக் கொள்ளும்போதும் தாகமாய் இருக்கிறது. நான் இன்னமும் துன்பக் கிண்ணத்திலிருந்து பருக வேண்டும் என்றே அவர் அவ்வார்த்தைகளை மொழிந்தார்.

இயேசுவின் தியாக உணர்வும் கீழ்ப்படியும் பண்பும், இறை இரக்க உள்ளமும் அளவற்ற அன்பும் தணித்திடா துன்பத்தை அடையும் மனதினையும் கொண்டுதான் அவர் தமது தாகத்தை தணித்துக் கொண்டு ‘எல்லாம் நிறைவேறிற்று’ (யோவா 19:30) என்று கூறி இறைவன் தம் ஆவியை ஒப்படைத்தார்.

அன்பர்களே! மனித குலத்திற்கு சிலுவை சாவின் மூலம் மீட்பும், வாழ்வும் உண்டாகிவிட்டன. இனி எம்மக்கள் என்றும் இறை வழியில் நடந்து நிலை வாழ்வினை உரிமையாக்கிக் கொள்வர் என்று நினைத்து இயேசு கிறிஸ்துவின் அந்தக் கணப்பொழுது அவரது தாகம் தணிக்கப்பட்டது. ஆனால், இயேசுவின் தாகம் முற்றிலும் தீர்ந்ததா? துன்புறுவோருக்காக வேண்டுதல், மன்னித்தல், உண்மையாக நடந்துகொள்ளுதல் போன்ற தாகம் தீர்க்கும் செயல்களின் நாம் ஈடுபட்டதுண்டா? சிந்திப்போம். இயேசு இன்னமும் தாகம் கொண்டுள்ளாரா?

## விசுவாசத்தின் அச்சாணி!


இயேசுவின் உடல் கல்லறையில் மூன்று நாட்கள் துயில் கொண்ட பிறகு மாட்சிமையுடன், மாண்புடன் உயிர்த்தெழுந்தது. நம் கிறிஸ்தவ திருச்சபை, இயேசுவின் உயிர்ப்பின் மூலம் அடிக்கல் நாட்டப்பட்டு இன்று இறைவன் வாழும் ஆலயங்களாய் நாம் வாழ வழிவகை செய்கிறது.

உயிர்ப்பின் காலம் - நமக்கு புத்துயிர் ஊட்டும் காலம். சீரிய தவத்தையும், பக்தி முயற்சியையும், இறைவனின் பாடுகளையும் உணர்ந்து, தியானித்து மனம் நொந்த ஒவ்வொரு உள்ளத்திற்கும் உத்வேகம் அளித்திடும் காலம். எனவேதான் உயிர்ப்பினை பற்றியும் கிறிஸ்தவர்களாக நாம் வாழும் வாழ்வினை பற்றியும் புனித பவுலடியார் ‘இயேசு வாழ்கிறார், நாமும் வாழ்வோம்’ (1கொரி 15:12-19) என்பதன் மூலம் அழகாய் விளக்குகிறார். உயிர்த்த இயேசுவை கண்டதினால் சீடர்கள் தைரியம் பெற்று இறையாட்சியை பற்றி பறைசாற்றத் தொடங்கினர். கிறிஸ்தவர்களை வதைக்கும் பண்பு கொண்ட சவுல் உயிர்த்த இயேசுவை கண்டதன் மூலம் புனித பவுலடியாராக உருப்பெற்றார். இயேசுவின் உயிர்ப்பும் நம் வாழ்வில் எத்தகைய மாற்றத்தை உண்டாக்குகின்றது என்று சிந்திப்போம்.

## தாகம் – தீர்ப்பவர்களாய்

கிறிஸ்தவ மறைபோதனைகள் யாவும் இயேசுவையும், இயேசுவின் உயிர்ப்பினையும் மையமாகக் கொண்டும், அவர் ஆற்றிய பணிகளையும், பட்ட பாடுகளையும் பக்கபலமாக்க கொண்டும் கட்டமைக்கப்பட்டு உள்ளது. எனவே, பாடுகளின் மூலம் தாகம் கொண்ட இறைவன், உயிர்ப்பின் மூலம் அத்தாகம் தணியப்பெற்று தம் மக்களுக்கு மீட்பினை உண்டாக்கி மீண்டும் தாகம் அடைந்துள்ளார். காரணம், நம் பாவங்களே ஆகும். மனித இயல்பு பாவம் செய்வது என்பதனை மாற்றியமைக்கவே வார்த்தை மனுவுருவானார். புனித பவுலடியாரின் மொழிகளுக்கிணங்க ‘இயேசு வாழ்கிறார், நாமும் வாழ்வோம்’ (1கொரி 15:12-19) எனவே, இயேசுவின் உயிர்ப்பின் மூலம் புது வாழ்வில் நுழைவோம்.

❖❖❖





ஞான ஒளி
GNANA OLI

14 சித்திரை 2019

உயிர்ப்பு ஞாயிறு சிறப்பிதழ்





## இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

**ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே. இன்று அக்களிப்போம் அகமகிழ்வோம்.**



### பாஸ்கா ஞாயிறு (21.04.2019)

பேதுரு

**வாசக விளக்கம்:** உயிர்த்த ஆண்டவரின் அருளும் ஆசீரும் அனைவரோடும் தங்குவதாக. இயேசுவின் உயிர்ப்பின் சக்தியால் தான் திருஅவையானது பிரமாண்டமாக வளர்ந்து நிற்கின்றது. இயேசு புதைக்கப்படவில்லை. மாறாக அவர் விதைக்கப்பட்டார். விதைக்கப்பட்ட விதை நிலத்தைப் பிளந்துகொண்டு உயிரோட்டத்தோடு வெளியே வருகின்றது. கல்லறையை பிளந்துகொண்டு இயேசு உயிர்த்தெழுந்தார். இன்றைய விழாவை நாம் உற்றுநோக்கும்போது இது வெறும்சடங்கல்ல இது ஒரு வரலாற்று உண்மை. இதுவே நம் விசுவாசத்தின் அச்சாணியுமாகும். இயேசுவின் உயிர்ப்பு கிறிஸ்தவர்களாகிய நாம் விண்ணகம் அடைவோம் என்ற உறுதிப்பாட்டை தருகின்றது. எனவே நாம் இயேசுவின் உயிர்ப்பை மற்றவர்களுக்குப் பாறைசாற்றி வாழவேண்டும். நம்முடைய அன்றாட வாழ்க்கையின் வழியாகவும் செயல்பாடுகள் மூலமாகவும் வார்த்தைகளின் வாயிலாகவும் இதை நிறைவேற்றலாம். கிறிஸ்தவ வாழ்வென்பது இருப்பதே போதும், இயங்குவதே போதும், இதுவரை வாழ்ந்ததே போதும் என்பதல்ல மாறாக நம்முடைய வாழ்வு அர்த்தமுள்ள வாழ்வாக இருக்கவேண்டும்.

**முதல் வாசகம் : தி.ப 10:34,37-43**

இறந்த இயேசு உயிர்த்தெழுந்த பின்பு அவரோடு உண்டு, குடித்த நாங்களே இதற்குச் சாட்சிகள்.

**பதிலுரைப் பாடல் :**

ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே. இன்று அக்களிப்போம் அகமகிழ்வோம்.

**இரண்டாம் வாசகம் : கொலோ 3:1-4**

மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள் அங்கு கிறிஸ்து அமர்ந்திருக்கிறார்

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா நம் பாஸ்கா ஆடாகிய கிறிஸ்து பலியிடப்பட்டிருக்கிறார். ஆகையால் நாம் ஆண்டவரின் பாஸ்காவைக் கொண்டாடுவோமாக. அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : யோவா 20:1-9**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல இறைவா! எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

அன்புத் தந்தையே இறைவா!

இவ்வுலகில் இறையாட்சியை அமைக்கப் பயணம் செய்யும் உமது திருஅவைக்கு உமது அருளாசியை வழங்கியருளும். அதை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவியர் யாவருக்கும் தூய ஆவியின் கனிகளைப் பொழிந்து, அவர்கள் காலத்தின் குறிகளை அறிந்து திருஅவையை வழிநடத்தும் ஆற்றலை பொழிந்தருள வேண்டுமென்று...

தந்தையே இறைவா!

துன்பங்களின் ஊடாகவே கிறிஸ்து மகிமை பெற்றார் என்பதை உணரும் நாங்களும் கிறிஸ்தவ விழுமியங்களை கைக்கொண்டு மற்றவர்களுக்காக எவ்வகை துன்பங்களையும் ஏற்று பிறருக்கு வாழ்வளிக்கவும், எப்பொழுதும் உயிர்த்த இயேசுவின் சாட்சிகளாக வாழவும், எதுவித ஏற்றத்தாழ்வும் பாராமல் அனைவரும் சமம் என்ற மனநிலையுடன் வாழவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

அன்பின் தந்தையே இறைவா!

இயேசுவின் வெற்றுக் கல்லறை நம்முடைய உயிர்ப்பு வாழ்வின் மணிமகுடம் என்பதை நாம் உணரவும் இயேசுவின் உயிர்ப்பானது நாமும் விண்ணகம் அடைவோம் என்ற உறுதிப்பாட்டை தருகின்றது என்பதை ஏற்று, எமது வாழ்க்கையின் எல்லாப் பாவங்களுக்கும் மரித்து சொல்லாலும் செயலாலும் வாழ்வாலும் உயிர்த்த இயேசுவின் சாட்சிகளாக வாழ்ந்திடத் தேவையான வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

### உயிர்ப்புக்காலம் 2ம் ஞாயிறு இறை இரக்க ஞாயிறு (28.04.2019)

**வாசக விளக்கம்:** இறை இரக்கத்தின் ஞாயிறு தினமாகிய இன்று நாம் நமது நம்பிக்கையையும் நினைவுகூர அழைக்கப்படுகின்றோம். அதற்கு நற்செய்தியில் வரும் தோமா நமக்கு வழிகாட்டுகின்றார். இறைமறுப்புக் கொள்கைகளால் அல்லாடிக் கொண்டிருக்கும் இன்றைய உலகிற்கு காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர் என இயேசு விளக்குகின்றார். இயேசுவின்மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கை விசுவாசம் ஆழமானதாக இல்லாதவரை நம்முடைய ஆன்மீக வாழ்வு மேலோட்டமானதாகவும் நுனிப் புல் மேய்வதைப் போலவும் தான் இருக்கும் என்பதை உணர்ந்து கொண்டு தோமையாரைப் போன்று நாமும் இயேசுவை நம் வாழ்வில் சந்தித்து விசுவாசத்தில் நிலைத்து நின்று உயிர்ப்பின் மக்களாக வாழ்வோம். இன்று இறைஇரக்க ஆண்டவர் கூறும் வார்த்தையான “நம்பிக்கையற்றவராய் இருக்காதே நம்பிக்கை கொள் வாழ்வு பெறுவாய்” என்பதை ஏற்று வாழ முன்வருவோமாக.

**முதல் வாசகம் : தி. பணி. 5:12-16**

ஆண்டவரில் நம்பிக்கை கொண்டோரின் கூட்டம் வளர்ந்துள்ளது.

**பதிலுரைப் பாடல் :**

ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள், ஏனெனில் அவர் நல்லவர், என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு.

**இரண்டாம் வாசகம் : திருவெளிப்பாடு 1:9-13, 17-19**

சாவுக்கு உட்பட்டேனாயினும், இதோ நான் என்றென்றும் வாழ்கிறேன்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா தோமா என்னைக் கண்டதால் நம்பினாய், காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர் என்கிறார் ஆண்டவர் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : யோவா 20:19-31வ**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல இறைவா! எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இறை நம்பிக்கையின் ஊடாக நிலைவாழ்வுக்கு வழிகாட்டும் திருஅவையின் தலைவரான திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவிகள் அனைவர்க்கும் உமது எல்லையில்லா இரக்கத்தை வழங்கி எப்பொழுதும் மக்களின் நலன்களுக்காகவும் திருஅவையின் வளர்ச்சிக்காகவும் உழைக்கும் ஆர்வத்தைப் பொழிந்தருள வேண்டுமென்று...

அமைதி நிறைந்த உலகை உருவாக்கும் பணியில் நாமும் நமது நாடும் கணிசமான பங்களிப்பை வழங்கி அனைவரின் நல்லெண்ணத்தைப் பெறவும் உலகிற்கு சமாதானம் கொண்டு வந்த இயேசுவின் உயிர்ப்பை முழு நம்பிக்கையுடன் ஏற்று அவரைப்போல் “என் ஆண்டவரே என் தேவனே” என அறிக்கையிடவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

இறை இரக்கத்தை நினைவுகூரும் இன்றைய நாளிலே ஆண்டவரின் இரக்கம் அவரது எல்லாப் படைப்புகள் பேரிலும் உள்ளது என்பதை உணர்ந்து நாமும் ஒருவர் ஒருவர் மீது இரக்கம் உள்ளவர்களாக வாழ்ந்து தோமையாரைப் போன்று இயேசுவை சந்தித்து நம்பிக்கையின் மக்களாக வாழ வரமருள வேண்டுமென்று...



# இவர்களுக்காக செபிப்போம்.

பெரிய வியாழன் அன்று திருச்சபை நினைவு கூறும் முக்கியமான நிகழ்வுகளில் ஒன்று; இயேசு, பணிக் குருத்துவத்தை ஏற்படுத்திய நிகழ்வு. எபிரேயர் திருமுகம் 4:14-16 ‘இயேசுவே நம் மாபெரும் தலைமைக் குரு’ என்று அறிக்கையிடுகிறது. தலைமைக் குரு தன் வாழ்நாள் முழுவதும் செய்த பணி என்ன?

- ✠ பணியிலே பாகுபாடு இல்லாமல்
- ✠ வர்க்கம் பேதம் இல்லாமல்
- ✠ எல்லோரையும் சமமாக மதித்து எல்லோரையும் அரவணைத்து அன்பு செய்து, மன்னிப்பு அளித்து பகிர்ந்து கொடுத்து உரிமை வாழ்வு கொடுத்து,

தாம் வாழ இதுதான் குருத்துவத்தின் ஆதாரமான பணி என்பதை வாழ்ந்து காட்டியவர் உறவின் எல்லைகளை விஸ்தரித்தவர்.


## இன்றைய புனிதமான நாளிலே

### திருத்தந்தைக்காக செபிப்போம்.

6 வருட காலத்திலே திருத்தந்தை அவர்கள், திறந்து விட்ட சாரர்களும், கதவுகளும் ஏராளம். திருச்சபையை பல மடங்கு விசாலமாக்கினார். அவரின் விரிவாக்கமான பணி தொடர வேண்டும். அதற்கு அவர் உடல் நலத்தோடு வாழ வேண்டும். உள அமைதியோடு இருக்க வேண்டும். அவரின் பாதுகாப்பைக் குறித்தும் திருதந்தைக்காக சிறப்பு செபம் செபிப்போம் இன்றைய நாளில்...

### எமது மறைமாவட்ட ஆயர்களுக்காக செபிப்பதுடன் பங்கு குருக்களுக்காகவும் செபிப்போம்.

அத்தோடு தன் நாடு, தன் இனம், தன் மொழி, தன் சாதி, தன் குடும்பம் போன்ற குறுகிய வட்டத்திற்குள் சுழலாமல் தன்னலமற்ற ஒரு சமூகத்திற்காக அவர்கள் வாழவேண்டும். அப்போது இயேசுவின் பணி வாழ்வின் கனவை நிறைவேற்ற முடியும். இவர்களுக்காகவும் செபிப்போம்.






# பெரிய வியாழன்

கோதுமை மணி போல் தம்மையே அழித்து, பிறருக்கு உணவாகத் தந்து பிறரை வாழ வைக்கும் பகிர்வு விழா. ஐந்து அப்பங்களை ஐயாயிரம்பேருக்கு பகிர்ந்தளித்த இயேசு அப்ப - இரச வடிவில் தம் உடலை தானமாக வழங்கிய கொடை விழா.



இறைவன் தம்மையே உணவாகத் தந்து மனிதர்களோடு நெருக்கம் ஆன உறவின் விழா.

குருத்துவம் என்னும் அருளடையாளத்தின் வழியாக பிறருக்கு அன்புப் பணி ஆற்றுவதின் தேவையை உணர்த்த இயேசு தம் சீடர்களின் பாதங்களைக் கழுவுகின்றார். தொண்டு செய்யாமல் தலைவராக ஆசைப்படும் பலருக்கு இச்செய்தி ஒரு சவாலாக அமைகிறது.

புனித வாரத்தின் மூன்று முக்கிய நாட்களில் முதல் நாள் பெரிய வியாழன். இதோ இயேசுவின் மரணம் அண்மையில் இருக்கிறது. மரிக்கப் போகிறார். இவ்வுலகை விட்டு தந்தையிடம் செல்ல இருக்கின்றார். நண்பன் யூதாசின் நம்பிக்கைத் துரோகம், நன்றி கெட்டத்தனம், இவைகளுக்கு மத்தியில் இயேசு தம் சீடர்களுடன் கடைசி இரவு உணவு உட்கொள்கின்றார். அப்பொழுது நற்கருணை குருத்துவம், என்னும் திருவருட்சாதனங்களை ஏற்படுத்துகின்றார்.

எனது சதையை உண்டு, என் இரத்தத்தைக் குடிப்பவன் நிலைவாழ்வைக் கொண்டுள்ளான். (யோவா 6:54) என்று சொல்லி, இயேசு எந்நாளும் நற்கருணை வடிவில் நம்மோடு இருந்து, தமது செய்வீகப் பிரசன்னத்தால் நமக்கு முடிவில்லாத வாழ்வு அளிக்கும் அருளடையாளமாக நற்கருணையை ஏற்படுத்தினார். கல்வாரி மலையில் இரத்தம் சிந்தி நம்மை மீட்டார். இன்று ஒவ்வொரு நாளும், நற்கருணைப் பலியின் வழியாக, இரத்தம் சிந்தாதப்பலியை நிறைவேற்றி நம்மை மீட்கின்றார். இன்று இயேசு உயிரோடு நம்மோடு வாழ்கிறார். நம்மோடு உறவாடுகின்றார். நமக்கு தம் அருளடையாளங்களை பொழிகின்றார் என்ற நிச்சயத்தை தருவது திருப்பலியில் நாம் பெறும் திவ்விய நற்கருணையே. எனவே நற்கருணையை ஏற்படுத்திய இந்த இரவு மிகவும் புனிதம் பெற்ற புனித வியாழன் எனவும் பெரிய வியாழன் எனவும் பெயர் பெற்று புனித வார நாட்களில் முக்கியத்துவம் பெறுகிறது.

# அந்த மூன்று நாட்கள்!

மலரொன்று கிளை சுமக்க முடியுமா? படகொன்று நதி சுமக்க முடியுமா? ஆனால் மரமொன்று பாரம்சுமக்க புறப்பட்ட நாள் தான் இன்று. இரண்டாயிரம் ஆண்டுகளாக எத்தனையோ இதயங்களைக் கிழித்துப் பார்த்த வெள்ளிக் கிழமைத் தான் பெரிய வெள்ளி. பரமனின் நேரமும், பாவத்தின் கொடூரமும், ஒன்றையொன்று நேருக்குநேராக சந்தித்த நாள். பாசம் பெரிதா? பாவம் பெரிதா? என்று பரீட்சித்துப் பார்க்கப்பட்ட நாள். சாவு வழியாக சாவுக்கு சாவு மணி அடிக்கப்பட்ட நாள்.

செய்யாத குற்றத்திற்காக, பேசாத குற்றச் சாட்டுகளுக்காக இயேசு கொலைத் தீர்ப்புக்கு விதிக்கப்படுகின்றார். மதகுருமார்களின் சதி, பொறாமை, இகழ்ச்சி, வெறுப்பு இவைகளால் இயேசு மனவேதனை அடைந்தார். உடலளவில் கன்னத்தில் அறை முகத்தில் காறி உமிழ்தல், தலையில் முள்முடி, உடலைக் கிழித்துப்போடும் கசையடிகள், கை, கால்களில் ஆணி, விலாவில்




ஈட்டி, இவைகளால் வேதனை அடைந்தார். பாடுகளின் உச்சக்கட்ட நிலையடைந்து தம் இன்னுயிரைக் கையளிக்கின்றார். இழிவின் சின்னமான சிலுவை மாட்சியின் மகிமையின் சின்னமாக மாற்றப்படுகின்றது. துன்பப்படுவோரின் தோழமையின் அடையாளமாக இயேசு சிலுவையில் தொங்குகின்றார்.

இயேசுவின் சாவு அவர் செய்த பிழைகளுக்காக அளிக்கப்படவில்லை. அவர் பிழையே இல்லாதவர். அவருக்காக இந்த மரணம் இல்லையே. மனித சமுதாயத்தை வருத்திய நுகத்தடிகளை அகற்ற முயன்றதால், வந்த தண்டனைத் தான் இது. இங்கு இயேசு உயிர்விட்டார் என்று கூறுவதைவிட இயேசு உயிர்த்திடப்பட்டார் என்று கூறுவதே சிறப்பு. இம்மனுக்குலம் உயர வேண்டுமென்றால் தாம் உயர்த்தப்பட வேண்டும்

## பெரிய வெள்ளி

என்பதே அவர் நோக்கம். இயேசு கல்வாரியில் சிந்திய இரத்தத்தினால் அச்சிடப்பட்ட நுழைவுச் சீட்டுத்தான் மரணம். இதன் வழியாகவே நாம் விண்ணகத்தினுள் நுழைய முடியும். எனவே மலைமீது உயர்த்தப்பட்ட இயேசுவை உற்று நோக்கியவர்களாய், நாம் நமது விண்ணகப் பயணத்திற்கு நம் வாழ்வை தொடர்வோம்.























# வெறுமையான கல்லறை

வாரத்தின் முதல் நாளில்
வாயில் திறந்து
வெறுமையான
கல்லறை.


வாழ்வு பெற்று
வெற்றி வீரராய்
உயிர்த்து
வந்த இயேசுவுக்கு
வாழ்த்துக்கூறிய
கல்லறை.

வான தூதரையும்
வரவேற்று
வரலாறு படைத்த
கல்லறை.

மூன்று நாட்கள்
மூடியிருந்த கல்லறை
மனுமகன் இயேசுவுக்கு
இடம் தந்த கல்லறை.

உயிர்த்த இயேசுவை
உலகிற்கு அறிவித்து
உயிர்ப்புக்கு சாட்சி
தந்த கல்லறை - அது
வெறுமையான கல்லறை
விசுவாசத்தை
விதைக்கும் கல்லறை.

ஆக்கம்: பென்ஜமின் சோமநாதர்











# உயிர்ப்புப் பெருவிழா

‘மண்ணின் மீது மனிதனுக்கு ஆசை; மனிதன் மீது மண்ணுக்கு ஆசை’ மண்தான் இறுதியில் ஜெயிக்கிறது. இது நடைமுறை வரலாறு. ஆனால் கிறிஸ்தவ விசுவாசத்தில் மனிதன் தான் வெற்றி பெறுகிறான் என்பதை இயேசுவின் உயிர்ப்பு நமக்கு உணர்த்துகிறது.


சாதாரண மானவர்களுக்கு வாழ்வு சாவில் முடியலாம். ஆனால் இயேசுவின் மாட்சியில் பங்குபெறும் நமக்கு சாவில் தான் வாழ்வு தொடங்குகிறது. இயேசு உயிர்த்தார். அவரைப்போல வாழும்போது நாமும் உயிர்ப்போம். இறப்பிலும் வாழ்வோம் என்பது உறுதி.

நற்செய்தி உயிர்ப்பை விளக்குவதில்லை. உயிர்ப்பு தான் நற்செய்தியை விளக்குகின்றது. தங்கள் வாழ்க்கைப் பாதையில் சுமைகளோடு ஆண்டவரைப் பின்தொடர்ந்தவர்களுக்கு இறையாசீர் நிறைவாக உண்டு என்பதை இந்நாள் காட்டுகின்றது. வாழ்நாள் முழுவதும் நமக்கு வரும் துன்பச் சுமைகளில் இயேசுவின்முகம் கண்டு ஆறுதல் பெறுவோம். திடம் கொள்வோம்.

கல்வாரியில் அடக்கப்பட்டஇயேசு மாட்சிமையோடு உயிர்த்தெழுந்தார் ‘இக்கோயிலை இடித்து விடுங்கள்; நான் மூன்று நாளில் இதைக் கட்டியெழுப்புவேன்’ (யோவா 2:19) என்ற வரிகளுக்கு விளக்கம் அளிக்கின்றார். ‘சாவே உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே? (1கொரி 15:55) என்ற பவுலடிகளின் வரிகளுக்கு வலிமை சேர்க்கும் வகையில் இயேசுவின் உயிர்ப்பு,அமைந்துள்ளது. ஆகவே நாமும் நம் தீய எண்ணங்கள், சுயநலங்கள், பாவ வழிகளை விட்டுவிட்டு இயேசுவோடு உயிர்த்தெழுவோம்.

திருமுழுக்கு பெற்ற நாம் முழுமையான மாற்றம் பெற்றவர்களாக புதுவாழ்வு வாழ்வோம். விண்ணக வாழ்வுக்கு நம்மைத் தகுதியாக்கிக்கொள்வோம்.


இயேசுவின் இதயத்திலிருந்து இரக்கத்தின் ஊற்று திறக்கப்பட்டு வழிந்தோடும் இம்மூன்று நாட்களிலும் அவரது இரக்கப் பெருக்கத்தை அனுபவிப்போம். எத்துணை துன்பங்கள் சோதனைகள்,வாட்டும் நோய்கள் வந்தாலும் உயிர்த்த இயேசுவின் கரம் பற்றி நம்பிக்கையோடு வாழ்வைத் தொடர்வோம்.



**அனைவருக்கும் இயேசுவின் உயிர்ப்பு விழா வாழ்த்துக்கள்.**







# இயேசுவே உம்மோடு கல்வாரி சிகரம் வரை...



த. மேரி பற்றிசியா

நீர் நன்மை செய்தவர்கள் உம்மை
சிலுவைச் சாவுக்கு கையளித்தனரே!
நானும் நன்மை செய்தவர்கள், என்னை பொருளாய்
தூக்கி எறிந்த போது உம் வேதனை புரிந்தது.

நண்பா என முத்திட்டு உம்மைக் காட்டிக்
கொடுத்தனரே!
இயேசுவே என்னோடு இனிக்கப் பேசியவர்கள் என்
முதுகில் குத்தியபோது உம் வலி தெரிந்தது.

உமக்கு இது வேண்டாம் என கதறியவர்
உம்மை மறுதலித்தாரே!
பலரை உயர்த்திவிட்ட என் முகம் பார்த்து
உன்னை தெரியாது என சொன்னபோது இதயம்
வெடித்ததை உணர்ந்தேன்.

முள்முடி சூட்டிபோது தலைக்குள் முள் இறங்கிய
வேதனையில் துடித்தீரே!

உழைத்து களைத்து நோயாகி நான் வீழ்ந்து
கிடக்கையில் அந்தத் துடிப்பை உணர்ந்தேன்.

நீர் விழுந்த போது உம்மை சாட்டையால் அடித்து
எழுப்பியபோது உள்ளம் நொறுங்கியதே!
நான் வீழ்ந்தபோது தூக்கிவிட ஒரு கரம் இல்லாமல்
பழிச்சொல் கூறி பலர் வதைத்தபொழுது
உம் உள்ளம் எனதானது.

ஆடைகள் களைந்த போது
அவமானம் தாங்காது வெதும்பினீரே!
பலபேர் முன்னிலையில் சுயகௌரவம் இழந்தபோது
உம் அவமானத்தின் ஆழம் என்னை தாக்கியது.

பலரை தேடிச்சென்ற கால், கைக்கு
ஆணிகளை பரிசாக்கினரே!
நன்மை செய்தும் தூற்றப்பட்ட போது
உம் காயங்களின் அகோரம் எனை வாட்டியதே.

பிறருக்காய் துடித்த இதயமும் உயிரும் பலியாய்
சிலுவையில் உடைக்கப்பட்டதே!
பிறருக்காய் வாழ அர்ப்பணிக்கையில்
பல தடைகள் பல வலிகள் என் இதயத்தையும்
உம்மோடு சேர்த்து உடைத்தேன்.

தன் சிலுவையை சுமந்துகொண்டு என் சிலுவை
வழியில் நடக்காதோர் என் சீடர் அல்ல என்றீர்!
இயேசுவே எல்லாவித அவமானம், பழிச்சொல்
புறக்கணிப்பு, காயம் எல்லாம் தாங்கி தாண்டி
உம்மோடு உம் சிலுவையின் பாதையில் பயணித்து
கல்வாரி சிகரம் வரை வந்துவிட்டேன்.

உம்மோடு புதைக்கப்படலாம் புதிதாய்
இறையாட்சி மண்ணில் விதைக்கப்பட வரம்
கேட்கிறேன்
புது புரட்சியாய் உயிர்த்தெழ அருள் கேட்கிறேன்
தடைகளை அடிமைத்தளைகளை உடைத்தெழ
உமை கேட்கிறேன்

# உயிர்ப்பு விழா



ஆண்டவர் இயேசு
உயிர்த்தார்.
ஆலேலூயா.


வார்த்தையாக வந்தவர்.
வாழ்வு தர வந்தவர்.
ஒளியாக வந்தவர்.
உயிர்த்து வந்தவர்
இயேசு அவர்.
ஒளி - இருளை வென்றது.
வாழ்வு - சாவை
வென்றது.
சாவை வென்றவர்.
சர்வ வல்லவர்.

சரித்திரம் படைத்தவர்.
சத்தியமாக உயிர்த்தவர்.
இயேசு அவர்.
உயிர்த்த ஆண்டவரை
உலகிற்கு அறிவிப்போம்.
சான்று பகர்வோம்.
சாட்சிகளாவோம்.
ஒளியின் மக்களாவோம்.
உன்னத கடவுளுக்கு
மகிமை சேர்ப்போம்.

உயிர்ப்பு விழா
நல் வாழ்த்துக்கள்.

ஆக்கம்:
பென்ஜமின் சோமநாதர்.
தெஹிவளை.

# அவர்கள் கூச்சலே வெற்றி கண்டது...



அவர்கள் குரலே வென்றது
அவர்கள் அவனைச்
சிலுவையில் அறையும்
சிலுவையில் அறையும்
என்று உரக்க கூறினார்கள்.
அவர்கள் கூச்சலே
வெற்றி கண்டது கும்பிடப்பட
வேண்டியவன் குனிதபடி

குழம்பி நிற்கிறான்
நீதிக் குழந்தையை
கருத்தாங்கினான்
நிர்க்கதியாய் நிற்கிறான்
கூட்டுக் கொள்ளையர்களின்
காட்டுக் கூச்சலில்
நீதிக் கதை மௌன அலறல்
அடங்கி அமர்கிறது

இயேசுவை.....
கருவறுக்க நினைக்கும்
விலங்கு மனிதர்களின்
கூட்டுக் கொள்கை இந்த
கூச்சலே - அந்த
கூச்சலை இயேசுவுக்கு
பாடை கட்டியது.

# வெற்றிப் பரிசு



ஆணிகளால் பிளக்கப்பட்ட
அற்புதரே! தோணியாகி பிறரை
நிந்தனைக் குழிக்குள் மாட்டி
மகிழ்கிறோம் தினமும்...
காயங்களால்
சாயமிடப்பட்ட அன்பரே!
அவமரியாதை நச்சுக்
காயங்களால் அனேகம் பேரை
அழிக்கிறோம் அன்றாடம்....
சொல்லொண்ணா
வேதனையில்
வெம்பியழுதவரே!
மெல்ல முடியா நிலுவைத்
தொகையாகவே பூமிப்பந்தில்
நாங்கள்....
சவுக்கடி பட்டும்
சப்தமிடா சரித்திரமே!
சாட்டையடிகளாகவே
அடுத்தவர் உயிரோடு
விளையாடுகிறோம்
சமூக மைதானத்தில்....

முள்முடி சூட்டப்பட்டு
நொந்து கதறியவரே!
பிறர் வாழ்வில்
முள்முடி ஆவணமாகவே
மாறிப்போகிறோம் நாளும்...
செந்நீர் வடித்த
இயேசுவே! வெந்நீர்
கோபத்தில் பிறரை வேக விட்டு
சுகம் காண்கிறோம் நாளும்...
தலைசாய்க்க
இடமில்லை
என்று மனமுருகிய தேவா!
மலைபோல் குவிக்கும்
செல்வமெல்லாம்
ஒருநாள் கருகிப் போகும்
குருத்தோலை சாம்பலென
மனம் கசிந்து உம்மில்
திரும்பிவர. திருந்தி வாழ
வெற்றிப் பரிசாக எம்மில்
உயிர்ப்பீரா! அன்பின் அரசே
தீவினை அறுத்து



# இயேசு உயிர்த்தெழுந்தார்!

மேய்ப்பன் இல்லா a
மந்தைகளை
மீட்டுக் காத்து இரட்சிக்க
வாய்த்த ஆயன் வழிகாட்ட
வைய மாந்தர் வழிதொடர
ஏங்கும் வேதப் பரிசேயர்
இயேசு மீது பழிசுமத்தப்
பாஸ்கா நாளின் மூன்னிரவில்
பாவியூ தாசால்
சிறைப்பட்டார்

நீதி மன்றம் ஜெனசரீமில்
நியாய வாதி போஞ்சுபிலாத்
தீதில் லாதத் தெய்வமகன்
தேவ நிந்தனை செய்தார்
எனப் பாவிகள் தூண்டிட
தீர்ப்பளித்தார்
பலவா றவரை அவமதித்து
தேவனைக் கபால
மலைமேல் சிலுவையி
லறைந்து கொன்றனரே.

பூமியும் வானமும் நடுநடுங்க
புயலும் இடியும் கிடுகிடுக்க
ஆலயத் திரைகள்

அறுந்துவிழ
ஆழியும்குமுறி ஆர்ப்பரித்து
காவலர் கண்கள்
ஒளியிழக்க
கர்த்தர் மின்னல் l
பேரொளியாய்
பூவுடலோடு
உயிர்த்தெழுந்தார்
புனிதர்கள் பணிந்திடக்
காட்சி தந்தார்.

ஆழப் புதைத்த சத்தியமும்
அகிலம் உணர
வெடித்தெழுமே
தாழப் புதைத்த
உண்மைகளும்
தாய்வெளி யரங்கம்
ஆகிடுமே
வாழும் உலகின் நியதிதனை
வான்மகன் இயேசுவைக்
கல்லறையில்
அடக்கம் செய்ய
உயிர்த்தெழுந்த a
அற்புதம்
விளக்கிக் கூறிடுமே!


# "சாவே உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே?" (1கொரி 15:55)





அருட்சகோதரி. டெலாறோஸ் அ.கா

**சாவுக்கு சவுக்கடி கொடுத்து சத்தியவான் இயேசு சகலகலா வல்லவனாய் உயிர்த்தெழுந்தார், சாவை ஜெயித்தெழுந்தார்.**



உயிர்ப்பும் உயிரும் நானே என்றார்
உத்தானமும் வழியும் வாழ்வும் நானே என்றார்
உண்மைக்கு சாட்சி பகர சாட்சி நானே என்றார்
உரிமை வாழ்விற்கு உரிமை வாழ்வு நானே என்றார்

சத்தியவானாய் சகலகலா வல்லவனாய் உயிர்த்தெழுந்தார்.
சகலர்க்கும் சகலதுமாய் வாழ்வளிக்க உயிர்த்தெழுந்தார்.
சத்தியமும் ஜீவனுமாய் உயிர்கொடுக்க உயிர்த்தெழுந்தார்.
சந்நிதானம் இறை சந்நிதானம் மகிழ்ந்திட உயிர்த்தெழுந்தார்.

தாழ்ச்சியின் சாட்சியாய் நமக்கு மீட்பளித்தார்
தாழ்பணிந்து வணங்குவோம் நம் மீட்பரை
தாற்பரியங்கள் புரிந்து தரணியில் ஆர்ப்பரிப்போம்
தாசர்கள் நாம் மகிழ்ந்து வணங்குவோம் எம் மீட்பரை

கருணையின் வள்ளலாய் காசினியில் உயிர்த்தெழுந்தார்.
கடவுளின் திருமகனாய் கனிவுடன் உயிர்த்தெழுந்தார்.
கர்த்தராய் காவியம் படைக்க உயிர்த்தெழுந்தார்.
கண்ணியம், கட்டுப்பாடு, காருணியம் வளர்த்திட உயிர்த்தெழுந்தார்.

மன்னாதி மன்னனை மண்டியிட்டு வணங்குவோம்
மகிமையுடன் உயிர்த்தெழுந்தார். எம் தேவனை வணங்குவோம்
மகிழ்வுடன் வருவோம், மகிழ்ந்து மன்னனை வணங்குவோம்
மங்கா மகிமையில் உயிர்த்தெழுந்த எம் இறைவனை வணங்குவோம்

புதிய வானமும் புதிய பூமியும் பூரிக்க எழுந்தார்
புண்ணியங்கள் பெருகி பூமி செழித்திட எழுந்தார்
புதிய வாழ்வும், புனிதமும் புகுந்திட எழுந்தார்
புகழ்வோம் பறைசாற்றுவோம் புகழ்ந்தேற்றுவோம் எம் இறைவனை

இன்னல்கள் இடர்களை களைந்திட எழுந்தார்
இனிய நல் இதயங்கள் உருவாக்கிட எழுந்தார்
இன்பமும் ஈவிரக்கமும் இகத்தில் வளர்க்க எழுந்தார்
இகமெல்லாம் இறையருள் பெருகி வளர்ந்திட எழுந்தார்

அன்பின் ஆசானாய் அவனியை ஆண்டிட எழுந்தார்
அகிலம் அனைத்தும் அன்பில் வளர்ந்திட எழுந்தார்
அமைதியின் மன்னனாய் அகிலத்தை ஆண்டிட எழுந்தார்
அனைத்து அகமகிழ்ந்து ஆன்மீகத்தில் வளர எழுந்தார்

எழுந்தார் நாதன் சாவை வென்றிட எழுந்தார்
எம்மவர் இதயம் எப்போதும் மகிழ்ந்திட எழுந்தார்
எந்தையே இறைவன் எம்மவரை மீட்க எழுந்தார்
எந்நேரமும் நாம் நல்வாழ்வு பெற்றிட எழுந்தார்

பாரெங்கும் பாசங்கள், நேசங்கள் பரப்பிட எழுந்தார்
பாதைகள் அனைத்தும் செம்மைப்படுத்தப்பட எழுந்தார்
பாமர மக்களுக்கு புதுவாழ்வளிக்க எழுந்தார்
பாவாலும் மனப்பூவாலும் வாழ்த்துப் பாடுவோம் எம் மன்னன் இயேசுவிற்கு

வாழ்த்துவோம் வணங்குவோம் வல்ல தேவனை,
வாருங்கள் நாம் கூடி மகிழ்ந்து கொண்டாடுவோம்
வானமும் பூமியும் வையகமும் இணைந்து போற்றிட
வாழ்வளித்த வள்ளலை வாயாரப் பாடிப் புகழ்வோம்

ஒன்றே குலம், ஒருவனே தெய்வமென
ஓதிடுவோம் புகழ்மாலை
ஓரின மக்களாய் வாழ்த்திடுவோம் வல்ல தேவனை
ஒன்றிணைந்து பாடுவோம்
உயிர்த்த இயேசுவின் மாட்சிமையை
ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் உன்னத தேவனின்
புகழ்ச்சியைப் பாடி காலமும் நேரமும் காணது.

கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை பயனற்றதே" (1கொரி 15:17)

# கல்வரிப் பலியில் உதயமாகும் கிறிஸ்தவ வாழ்வு

எழுவதின் இரகசியம், விழுவது, விளைவதன் இரகசியம் புதைவது, உயிர்ப்பின் இரகசியம் படிவது, கல்வாரிப் பலியின் இரகசியம் உதயமாகும் வாழ்வு. இது வாழ்வின் நியதி. அன்றாடம் பல்வேறுபட்ட நிகழ்கால செய்திகளைக் கேட்டு மனித வாழ்வு இதுதானா என்று மனிதனே வியந்து கொண்டிருக்கும் எமக்கு மீண்டும் உயிர்ப்பு விழாவில் பங்கேற்க நாம் அனைவரும் விரும்பியோ விரும்பாமலோ அழைக்கப்படுகின்றோம்.

போதைப்பொருள் பிரச்சினையும், மதப்பிரச்சினையும், எம் நாட்டை அலைக்கழித்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் நாம் வாழ்கின்றோம். இவை எம்மையும் சிந்திக்க தியானிக்க அழைக்கின்றது. வருடா வருடம் தவக்காலத்தை நல்ல முறையில் அனுசரித்து திருயாத்திரை செய்து ஒறுத்தல் செய்து தவம் செய்துவிட்டால் உயிர்ப்பு விழா அர்த்தமாகி விடுமா? ஆம் உயிர்ப்பு விழா கல்வாரியில் ஒருவரின் இரத்தத்தினால் உதயமாகிய ஒரு மாபெரும் வாழ்வு. இவ்வாழ்வைக் கொடுத்த இயேசுவின் வாழ்வில் கட்டியெழுப்பவே இயேசுவின் உயிர்ப்பு விழா எம்மை அழைக்கின்றது.

கல்வாரிப் பலி எம் வாழ்க்கைப் பலி. இது எம் வாழ்வில் தொடரும்பலி. இயேசு ஈடு இணையற்ற இறைவாக்கினர். (யோவா 1:21) கடவுளால் அனுப்பப்பட்ட அவர் தம் பணியை அஞ்சாமல் செய்ததால் இயேசுவுக்கு ஏற்பட்டது இறைவாக்கினருக்குரிய முடிவு. வெறுத்து ஒதுக்கப்பட்டு மரணத்தை எதிர்நோக்குகிறார்.

கடவுள் அரசைத் தம் போதனையில் பொருளாகக் கொண்டார் இயேசு. இக்கடவுளின் அரசு நிலைபெற வேண்டுமென்றால் சோதனை, துன்பம், பாடு, மரணம் எனும்பாதை தவிர்க்க முடியாத ஒன்று. இப்பாதையைத் தேர்ந்துகொள்ள அவர் தயங்கவில்லை.

இறைவனின் ஊழியர்கள் அவர் பலருடைய மீட்பிற்காக தன் உயிரைக் கையளிக்கின்றார். பாஸ்கா செம்மறியின் இரத்தம், யூத மக்களை காப்பாற்றியதுபோல, கடவுளின் செம்மறியான இயேசு மனித குலத்தை தன் மரணத்தால் மீட்கின்றார். மனித குலத்திற்கு கல்வாரியில் வாழ்வாக்கின்றார்.



அருட்சகோதரி. சாந்தனா. அ.கா

மருத்துவமனையில் பலர் கண்கானிக்க அமைதியாக மரிக்கவில்லை இயேசு, உற்றார் உறவினர்கள் சூழ்ந்து நிற்க வீட்டில் படுத்தவாறே இறக்கவில்லை. இயேசு. அவர் வாழ்வில் இறுதியில் எல்லோருக்கும் நிகழும் ஒரு நிகழ்ச்சியல்ல இயேசுவின் மரணம். உடலும் உயிரும் பிரியும் வெறும் ஒரு இயற்கை நிகழ்வல்ல அது. அவரது மரணம், தனிப்பட்ட ஒன்று, தனித்துவமான ஒன்று. உலகையையே அதிர வைத்த என்றும் உலகை ஒரு கணம் பிரமிக்க வைத்த ஒன்று. இந்த மரணம் ஏதோ அவருக்கு எதேசையாக நடந்த ஒரு விபத்தல்ல. இம்மரணம் அவர் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து நிற்கின்ற ஒன்று. அவர் வாழ்க்கைப் போக்கிலிருந்தும், அவர் போதனைகளிலிருந்தும் சிலுவை மரணத்தைப் பிரிக்கவே முடியாது. கல்வாரிமரணம் அவர் வாழ்வில் இறுதி எல்லை அல்ல. மாறாக அதன் உச்சநிலை. அவர் போதனைகளின் முடிவல்ல, மாறாக அவர் போதனைகளின் விளைவு

இயேசுவின் சிலுவை மரணம் அவருக்கு எதிர்பாராமல் நடந்த ஒரு விபத்தல்ல. அவரே அதை முன்னறிவிக்கின்றார். உணர்ந்தார் என்றால் அவர் தனது கல்வாரிப் பலிக்கு பொருள் கொண்டிருக்க வேண்டும். வாழ்வு என்பது மடிந்தாலே வாழப்படும். மடிவதன் மூலமே உயிர்ப்பிக்கப்பட முடியும். மீட்பிற்கு கல்வாரியில் பதில் கிடைத்தது. இந்த மீட்பு தான் கிறிஸ்தவத்தின் ஆணிவேர். ஏனென்றால் கிறிஸ்தவம் இறைவனின் மீட்புத் திட்டத்தின் வெளிப்பாடு. இவ்வெளிப்பாடு கல்வாரியின் உச்சியில் உதயமாகியது.

கிறிஸ்தவத்தின் நெறிமுறைகள் தவக்காலத்திலும் கடந்து உயிர்ப்புதிட்டத்தில் நிறைவாகின்றது. மனித உருவில் பிறந்த இயேசு இறந்து சாவைவென்று இறைமனிததன்மையில் உயிர்த்துவிட்டார். அகிலத்தை பாவத்திலிருந்து மீட்டுவிட்டார். நம் இறைமைந்தர் இயேசு தினம் திருப்பலியில் பலியாகின்றார். தொடர் உறவின் கொடு முடியாக நற்கருணை எனும் அருட்சாதனத்தில் தன்னை வாரி வழங்கி வருகின்றார். உயிர்ப்பலியில் உன்னத மேன்மையை உணர! வாழ, வளர உயிர்ப்பு எம்மை அழைக்கின்றது. கல்வாரியில் உதயமாகி புதிய வாழ்வு எம்மை புதிய மனிதர்களாக வாழ அழைக்கின்றது. மனிதரின் விழ்ச்சிக்கு வெற்றி கிடைத்த நாள் இந்நன்நாளில், கிடைத்த வெற்றியை நமதாக்குவோம். வாழ்வாக்குவோம். வாழ்வால் வாழ்வோம். உயிர்ப்பின் சாட்சிகளாய் செல்வோம். உலகை வெல்வோம் அல்லேலூயா.








# வல்லமை விளங்கிடும் வாழ்வை வழங்கிட மரணத்தை வென்றார் கிறிஸ்து ஆண்டவர்

d

யூதப் பண்பாட்டிலும், யூத மரபுகளிலும், யூத சமய நம்பிக்கைகளிலும் இறந்தவர்கள் உலக முடிவில் உயிர்ப்பார்கள் என்பதுதான் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் எவரும் இறந்த மூன்றாம் நாள் உயிரோடு உடலோடும் உயிர்த்தெழுந்ததாக செய்திகள் இல்லை. எனவேதான் தமது உயிர்ப்பைப் பற்றி தமது சாவுக்கு முன்பாகவே இயேசு பலமுறை தமது சீடர்களுக்கு சொல்லியிருந்தாலும், அதனை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. அதுமட்டுமல்ல, தமது சாவுக்கு முன்பாகவே இயேசு தமது மூன்று சீடர்களை தாபோர்மலை உச்சிக்கு அழைத்துச் சென்று உருமாறினார். தன் உயிர்ப்பிற்குப்பின் எத்தகைய மகிமையில் இருப்பேன் என்பதை இயேசு முன்னடையாளமாகப் பிரசன்னப்படுத்தினார். நம் கிறிஸ்தவ நம்பிக்கையில் ஆண்டவர் கிறிஸ்து உண்மையாகவே இறந்த மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.

## நம் அன்றாட அனுபவங்கள்

நம் அன்றாட அனுபவங்கள் நமக்குச் சொல்லும் பாடங்கள் வேறு விதமாக இருக்கின்றன. புற்பூண்டுகளும் செடி கொடிகளும் மரங்களும் பறவைகளும் மிருகங்களும் மனிதர்களும் ஏன் எல்லா உயிரினங்களும் இவ்வுலகில் பிறக்கின்றன. வளர்கின்றன. இறக்கின்றன. எந்த உயிரும் மீண்டும் உயிர்த்து வாழ்வதைப் பார்க்கவில்லை. எனவே உயிர்ப்பது என்பது உண்மையா?

வாழ்வில் நாம் பேசுகின்ற தத்துவம் நிறைந்த பழமொழிகள் அனைத்தும் நம்வாழ்வு, நம் சாவோடு முடிவடைவதாகச் சொல்கின்றன. உதாரணமாக 'இருப்பது பொய் போவது மெய்" நாம் இருக்கிறோம் என்பது சுத்தப்பொய், சாகிறோம் என்பதுதான் உண்மை. காயமே இது பொய்யடா காற்றடைத்த பையடா" நம் உடல் என்பது பொய்யானது. அதில் காற்று நின்றவுடன் அது காணாமல் போய்விடும். 'முடிசார்ந்த மன்னரும் முடிவில் ஒரு பிடி சாம்பலாவார்' தலையில் தங்கமுடி அணிந்து மிகக் கம்பீரமாக ஆட்சி செய்பவரும் ஒரு பிடி சாம்பலாக ஒரு நாள் மண்ணில் புதைக்கப்படுவார். 'ஆடியடங்கும் வாழ்க்கையடா, ஆறடி நிலமே சொந்தமடா' மனித வாழ்வில் மனிதர் எதைச் சாதித்தாலும் எப்படி வாழ்ந்தாலும், இறுதியில் அவர்களது சாவில் மனிதர்கள் கொடையாகப் பெற்றுக்கொள்வது ஆறடி நிலம் மட்டுமே.

இவ்வாறு வாழ்வின் இறுதியில் நிலை சாவு என்பது நமக்குத்தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. ஆனால் இயேசுவில், இயேசுவின் போதனைகளில், அவரது வாழ்வில் கடவுள் வெளிப்படுத்தியிருப்பது சாவென்பது வாழ்வின் முடிவல்ல. அதையும் தாண்டி நம் அனைவருக்கும் உயிர்ப்பும், முடிவற்ற நிலை வாழ்வும் உண்டு என்ற அரும்பெரும் புதுமைகள் தான் அவை.

## பல் சமயச் சூழல்

எமது நாட்டில் நாம் பல சமயத்தினரோடு வாழ்கின்றோம். எனவே வாழ்வின் உண்மைகள் பற்றிய விளக்கங்களை சமயங்களிடம் நாம் கேட்டுத் தெரிந்துக்கொள்ளலாம். புத்த சமயத்தைக் கேட்டால் மனிதன் ஒவ்வொரு நிமிடமும் மாறிக்கொண்டே இருக்கின்றான் என்ற பதிலைச் சொல்கிறது. இந்து மதத்தைக் கேட்டால் அவரவர் செய்கின்ற நன்மை தீமைக்கேற்ப ஒருவருக்கு பல (ஏழு) பிறவிகள் உண்டு என்பிறது. சைன சமயத்தைக் கேட்டால்அவரவர் (கர்மா) செயல்பாட்டிற்கேற்ப அவரது எதிர்கால வாழ்வு அமையும் என்கிறது. கிறிஸ்தவ சமயத்தைக் கேட்டால், 'உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் நம்பிக்கை கொள்பவன் இறப்பினும் வாழ்வான்' என்ற இயேசு கிறிஸ்துவின் போதனையை எடுத்து விளக்குகிறது.

## உயிர்த்த கிறிஸ்துவைச் சந்தித்தவர்கள்!

சிலுவையில் இறந்த இயேசு மீண்டும் உயிர்த்தார் என்பது கிறிஸ்தவ நம்பிக்கை. இத்தகைய நம்பிக்கையை ஏற்றுக்கொண்டவர்கள் தொடக்கக்காலக் கிறிஸ்தவர்கள். இவர்களில் சிலர் உயிர்த்த கிறிஸ்துவை நேரடியாகச் சந்தித்துப் பேசவும், அவரோடு உணவுண்டு மகிழவும், உயிர்த்த ஆண்டவருக்குச் சான்று பகரவும் பேறுபெற்றார்கள். உதாரணமாக :

1. மதலேன் மரியாளுக்கு உயிர்த்த ஆண்டவர் தோன்றினார் என யோவான் (யோவா 20:11-18) எழுதியுள்ளார்.
2. உயிர்த்த கிறிஸ்து எம்மாவுஸ் சீடர்களுக்குத் தோன்றிய விவரங்களைப் பற்றி புனித லூக்கா தனது நற்செய்தியில் (லூக்24:13-35) விளக்குகிறார்.
3. சில முறை சீடர்களுக்கும், (யோவா 20:19-23, 21:1) தன் உயிர்ப்பைப் பற்றி பிறர் விளக்கியதை ஏற்காத தோமையார் சீடர்களோடு இருந்தபோது, உயிர்த்த கிறிஸ்துவே அவருக்குத் தோன்றினார் என யோவான தன் நற்செய்தியில் அறிவிக்கிறார். தோமையாரிடம் உயிர்த்த கிறிஸ்து கூறிய வார்த்தைகள் நம் காதுகளில் இன்று சங்காக முழங்க வேண்டும்.



'தோமா....
என்னைக்
கண்டதால்
நீ நம்பிக்கை
கொண்டாய்:
காணாமலே
நம்புபவர்கள்
பேறுபெற்றவர்கள்!'

ஆம், உயிர்த்த கிறிஸ்துவை நாம் பார்க்கவில்லை, அவரை நாம் சந்திக்கவில்லை. அவரோடு நாம் பேசவில்லை. உணவுண்ணவில்லை. ஆனால், கிறிஸ்து உண்மையாகவே உயிர்த்தெழுந்தார் என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். அந்த உண்மையை நம்புகிறோம். அதனையே உலகிற்குப் பறைசாற்றுகிறோம். நாம் நம்புவதாலேயே கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவை ஆண்டுதோறும் கொண்டாடி மகிழ்கின்றோம். அதனாலேயே நாம் அனைவரும் பேறுபெற்றவர்களாக வாழ்கின்றோம்.

## பவுலடியார் நமக்கு விடும் சவால்!

நாம் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா செல்லவில்லை. இக்கண்டங்களை நேரடியாகக் கண்டதுமில்லை. இருப்பினும் அங்கு சென்று வந்தவர்கள் சொல்லுவதை நம்பி ஏற்றுக்கொள்கிறோம். அதுபோலவே இயேசுவின் சீடர்கள் கிறிஸ்து இயேசு மரித்தார் உயிர்த்தார் என்பதை நமக்குச் சொல்கி-றார்கள். அவர்கள் சொல்வதை நாம் நம்புகிறோம். ஏற்றுக்கொள்வதால் மட்டும் நாம் உயிர்ப்பின் பலன்-களை பெறமுடியாது என்பது தான் பவுலடியார் நமக்கு முன் வைக்கும் சவால்....

தொடர்ச்சி 15ம் பக்கம்..




த. மேரி பற்றிசியா

நான் உனக்கு மலைமீதமர்ந்து இறையரசின் அன்பின் சாசனம் தந்தேன் - நீயோ என்னை நிலைகுலையச் செய்து எனக்கு மரண சாசனம் தந்தாய்

நீ வாழ உனக்கு அன்புக் கவிதை எழுதினேன்
நீ கல்லறைக்குள் எனை அடக்கி கண்ணீர் அஞ்சலி கவிதை எழுதவா அவசரப்பட்டாய்

உன் பிழைகளை நியாயப்படுத்தி காட்டிக் கொடுக்காமல் உன்னை காப்பாற்றினேன் - நீயோ பிழையில்லாத என்னை காயப்படுத்தி பிழையானவர்களிடம் காட்டிக்கொடுத்தாய்.

உன் கன்னத்தில் முத்தமிட தவித்து நின்றேன் - நீ முத்தம் தந்து கயவரால் கன்னத்தில் அறையப்பட்டு அவமானத்திற்கு உள்ளாக்கினாய்

உனக்கு வலிக்கவே வேண்டாம் என்று உன் காயங்களை என் உடலில் தாங்கினேன். - நீயோ மனதில் பாரியதொரு காயம் தந்து என்னை துடிக்கவிட்டாய்

பசியோடு நீயிருப்பாய் என தேடி உணவளித்தேன் - நீயோ என் தாகம் கூட தீர்க்க முடியாமல் காடி குடிக்கும் நிலைக்கு என்னை ஆளாக்கினாய்.


காணாமற் போய் விடுவாயோ என பயந்து உன் நிழலாய் நான் தொடர்ந்தேன். - நான் பகிரங்கமாய் தாக்கப்பட்டபோது நீ கணப்பொழுதில் ஓடி மறைந்தாய்

உன்னை கண்டபடி யாரும் திட்டிவிடக் கூடாது என கவனமாய் இருந்தேன் - நீயோ தூஷனத்தால் கொடியவர்களால் திட்டுவாங்க அனுமதித்தாய்

உனக்காகத் தான் இந்த உயிர் சுமக்கிறேனே என கதறினேன் - நீயோ உன்னை எனக்கு தெரியவே தெரியாது என்று மறுதலித்தாய்

நீ பட்டம் பெற புதியதொரு அன்புப் பாடநெறி கற்பித்தேன் - நீயோ முன்மாதிரியற்ற வாழ்வால் என் பாடநெறியே பிழை என்று உலகிற்கு சொல்லி நின்றாய்.

உனக்காய் பணிசெய்து சிலுவையில் உயிர்த்துறக்க கையளித்தேன் - நீயோ பணியை பிழையாக செய்து



மீண்டும் மீண்டும் நான் சிலுவையில் அறையப்பட கையளிக்கிறாய்.
நானோ உன்னை அன்பின் ஆபரணமாக்க நிர்வாணமாய் தொங்கி நின்றேன். - நீயோ சிலுவையை வெறும் ஆபரணமாக்கி என் பெயரை அவமதித்தாய்.

உன்னை நெருக்கமாய் நேசித்த என்னை - சிலுவையில் நொறுங்கியதை வேடிக்கை பார்த்தாய்

புதைக்கப்பட்ட என்னை வாழ்விக்க உன்வாழ்வு மாறினால் - ஒரு அன்புப் புதுக்கவிதை நீ எழுதினால் உன் வீதியில் வாழ்க்கை பாதையில் நானும் உயிரோடு நடமாட உன் உடன் வருவேன்.






இயேசுவின் உயிர்ப்பு யூதர்களும் சீடர்களும் எதிர்பார்க்காத ஒன்று. பலமுறை உயிர்ப்பைப் பற்றி சொல்லியும் மறந்து போனார்கள். "இந்த ஆலயத்தை இடித்துவிடுங்கள் மூன்றே நாளில் கட்டுவேன" (யோவா 2:19) என்றார். இயேசுவை சிலுவையில் அறைந்ததைக் கண்டு சீடர்கள் மனம் கலங்கி வாழ்வில் தோல்வியைத் தழுவியதாக நினைத்து, இருவர் எம்மாவுஸ் நோக்கி பயணித்தனர். சிலர் தங்களை அறைக்குள் மூடி மறைத்துக் கொண்டனர். மகதலா மரியாவின் உள்ளம் இருண்டுபோனது. யோவான் நற்செய்தியின் முடிவில் உயிர்த்த நம் ஆண்டவர் இயேசுவைச் சந்தித்த 1. மகதலா மரியா, 2. தோமா, 3. பேதுரு ஆகியோரின் வாழ்வில் நிகழ்ந்த சுவையான நிகழ்வுகள் சொல்லப்பட்டுள்ளன.

என்ன நோக்கத்திற்காக யோவான் இவற்றைச் சொன்னார். இயேசு உயிர்த்தார் என்பதை நிரூபிப்பதற்காகவா? அல்லது அதற்கும் மேலாக உயிர்ப்பின் அனுபவத்தை சுட்டிக்காட்டும் குறியீடுகளா? இயேசுவின் உயிர்ப்பு மேற்கூறிய நபர்களில் ஏற்படுத்திய தாக்கம் என்ன? இவ்வனுபவம் அவர்களுக்கு மட்டும் தானா? அல்லது எதிர்காலத்திற்கும், எல்லா நபர்களுக்கும் பாடம் புகட்டுகின்றனவா? இத்தகைய கேள்விகளுக்கு யோவான் பின்வருமாறு பதில் தருவார் "இயேசுவே இறைமகனாகிய

# 'நான் ஆண்டவரை கண்டேன்'

அருட்பணி. அந்திரியாஸ் பர்னாந்து அமதி.



மெசியா என நீங்கள் நம்புவதற்காகவும், நம்பி அவர் பெயரால் வாழ்வு பெறுவதற்காகவுமே இந்நூலில் உள்ளவை எழுதப் பெற்றுள்ளன" (யோவா 20:31)

முதலாவதாக, இந்த அனுபவங்கள் நாம் உயிர்த்த ஆண்டவரை எங்கேயும் எப்போதும் எவ்வேளையிலும் சந்திக்க இயலும் என்பதை நினைவுபடுத்துகின்றது. இந்நிகழ்வுகள் அதாவது இயேசு பேதுரு, மகதலா மரியா, ஆகியோரைச் சந்தித்தது ஆலயத்திலோ, தொழுகைக்கூடத்திலோ அல்லது யூதர்கள் புனிதமான இடங்கள் என்று கருதிய இடங்களிலோ அல்ல. மாறாக வாழ்க்கையே முடிந்துவிட்டது, மண்ணில் புதைக்கப்பட்டுவிட்டது இனி ஒன்றுமே இல்லை என்று சொல்லப்படுகின்ற கல்லறையில் இடம்பெறுகிறது. இன்பமும் துன்பமும் நிறைந்த, அழுகையும் ஆனந்தமும் உறைந்த வீட்டில் நடந்தவை. அலையோடும், புயலோடும் விளையாடும் கடற்கரையில் நிகழ்ந்தவை.

இந்நிகழ்வுகள் அனைத்தும் உயிர்த்த இயேசுவின் பிரசன்னம் அஸ்தமன இடத்தில், அன்றாட வாழ்விடத்தில், வணிகம் புளங்குகின்ற இடத்தில், வழிந்தோடுகின்றது. அதாவது மனித வாழ்வு சாதாரண இடங்களில் மாபரன் இயேசு உடனிருக்கின்றார். ஆம் இறைவனின் உடனிருப்பை பேராலயங்கள், வழிபாட்டு தலங்கள், திருத்தலங்கள் போன்றவற்றோடு அல்லது வழிபாடுகள் கூட்டங்கள், ஆராதனைகள், சிறப்பு நாட்கள், சிறப்பு நேரங்கள் என்பவற்றோடு மட்டுமா மட்டுப்படுத்துகின்றேன். உயிர்த்த ஆண்டவரைக் கட்டிப் போட முடியாது. உயிர்ப்பு செய்தி என்பது வாழ்வைப் பற்றியது. அதிலும் நிறைவான முழுமையான வாழ்வைப் பற்றியது. உயிர்ப்பின் ஒளியில் சமய வாழ்வு என்பது மனித வாழ்வின் அனைத்து தலங்களையும் பாதிக்கின்ற ஒன்றாக இருக்கவேண்டும். ஆகவே வாழ்விலிருந்து சமயத்தை தனியான ஒன்று என்று பிரித்துவிடக் கூடாது. இது சமயம், இது தீட்டு என்று பிரிக்கக்கூடாது. மாறாக எல்லாமே இயேசுவின் உயிர்ப்பால் புனிதமாகுதல் வேண்டும். உயிர்த்த இயேசுவின் உடனிருப்பைக் காலம், இடம், வழிபாடு என்று கட்டிப்போட்டு பார்க்கும் குறுகிய பார்வையிலிருந்து நாம் விடுதலை அடையவேண்டும்.

இரண்டாவதாக, உயிர்த்த ஆண்டவர் தேவையில் இருக்கும் மக்களை அவர்களின் தேவை-களைச் சந்திப்பவராகக் காட்சி தருகின்றார் என்பதை இந்நிகழ்வுகள் நினைப்பூட்டுகின்றன. மகதலா மரியா துயரம் நிறைந்தவராக இருந்தார். கண்களில் இருந்து வழிகின்ற நீர் அதைக் காட்டுகிறது. உள்ளம் உடைந்தவராய் அவரது தேடலில் இருந்த ஏக்கமும் ஆர்வமும் அதைச் சுட்டுகிறது. ஆயினும் துணிவு நிறைந்த பெண்மணியாய் இருந்தார். "நான் அவரை எடுத்துச் செல்வேன்" என்று கூறுவது இதற்கு சான்றாய் உள்ளது.



தோமாவோ ஆண்டவரைக் கண்டோம் என்று சொன்னவர்களின் கூற்றினை நம்ப இயலாதவராய் இருந்தார். ஐயம் என்பது அவரது அறிவிலும் இதயத்திலும் ஆழமாய் ஊடுருவியிருந்தது. ஆனால் உயிர்த்த ஆண்டவரைச் சந்தித்தபொழுது "என் ஆண்டவரே, என் தேவனே" என்னும் விசுவாச அறிக்கை செய்வதை காண்கின்றோம். ஈற்றில் இந்திய மண்ணில் இறைவிசுவாசத்தை ஊன்றச் செய்யும் திடம் கொண்டார்.

பேதுருவோ தன்னையே நம்பிய நிலைக்குத் தள்ளப்பட்டார். சிலுவைச் சாவை முன்னறிவித்தப் போது "ஐயோ, ஆண்டவரே இது உமக்கு வேண்டாம்" என்று சொல்லி தன் திட்டத்தை முன்வைத்தார். "உம்மை விட்டுப் பிரிவதில்லை" என்றவர் இயேசு இரத்த வியர்வை வியர்த்தப்போது அவரது துன்பத்தில் துணையாக இல்லாமல் உறங்கினார். முதலில் அனைவர் முன்னிலையிலும் இயேசுவை மறுதலித்தார். இரண்டாவது ஆணையிட்டு மறுதலித்தார். இறுதியாக சபித்து, ஆணையிட்டு மறுதலித்தார் (மத் 26:69-75) இவ்வாறு தொடர்ந்து நடந்தேறிய தோல்வியின் உச்சமாக மீண்டும் பழைய வாழ்விற்குத் திரும்பினார் (யோவா 21:1-14). தன்னை மட்டும் நம்பியதன் மூலம் தடுமாற்றங்களையும் தோல்விகளையும் சந்தித்த பேதுருவை தற்கையளிப்பு நிலைக்கு இயேசு இட்டுச் செல்வதை காண்கின்றோம். மூன்று முறை "அவரைத் தெரியாது" என்று மறுதலித்த பேதுரு உயிர்த்த இயேசுவை சந்தித்ததன் பின் மற்ற எல்லா சீடரையும் விட "மிகுதியாக அன்பு செய்கின்றேன்" என்று மூன்றுமுறை வாக்குறுதி கொடுத்தவர். இதன் மூலம் தன் தற்கையளிப்பை உறுதி செய்கின்றார். "இயேசுவைப் பற்றி தங்களால் போதிக்காமல் இருக்கமுடியாது என்று முழங்கிய பேதுரு தனது பணிவாழ்வில் வந்த துன்பங்களை மகிழ்வோடு ஏற்றுக்கொள்கின்றார்.

இந்த மூன்று சந்திப்புகளும் நமக்கு மனித வாழ்வின் மூன்று பெரும் பிரச்சினைகளை மனக்கண்முன் கொண்டு வருகின்றன.

1. இறப்பு
2. ஐயம்
3. மனவருத்தம்.

மகதலா மரியாவைப் போன்றே நாமும் நம் வாழ்வில் அல்லது மற்றவர்களுடைய வாழ்வில் தவிர்க்க முடியாத சாவை அல்லது சாவின் விளிம்பில் நிற்கும் தாங்கமுடியாத வலியைச் சந்திக்கின்றோம். தோமாவைப் போன்றே விசுவாச வாழ்வில் ஐயம் கொள்கின்றோம். தளர்ச்சி அடைகின்றோம். பேதுருவைப் போன்றே தவறுகளிலும் பாவங்களிலும் குற்றப்பழி உணர்வுகளிலும் அவமானங்களிலும் சறுக்கல்களிலும் வீழ்ச்சி உறுகிறோம்.

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வில் சந்திக்கின்ற இந்த மூன்று பெரும் பிரச்சினைகளில் தன்னம்பிக்கைத் தகர்த்தப்படுகிறது. நாம் பல முயற்சிகளை எடுத்து நம்மை தற்காத்துக் கொள்ள முயற்சிக்கின்றோம். நிறைவாழ்வைத் தரவந்த இயேசு இம்மூவரையும், இம்மூன்று தேவைகளில் சந்திக்கின்றார். இச்சந்திப்பின் பயனாக மகதலா மரியா நம்பிக்கையை கண்டடைந்தார். தோமா விசுவாசத்தை கண்டடைந்தார். பேதுரு மன்னிப்பைச் சுவைத்தார். இவர்களைப் போன்றே நாமும் எமது வாழ்வில் நம்பிக்கையை, விசுவாசத்தை, மன்னிப்பை அனுபவிக்க முடியும். இந்த நம்பிக்கையை யோவான் நற்செய்தியாளர் தன் நற்செய்தியினை நேர்மறையான கண்ணோட்டத்தில் முடித்து வைக்கிறார்.

ஆம் இயேசு உயிர்த்தெழுந்து வாழ்கின்றார். இயேசு தம் மக்களை, தாம் அன்பு செய்தவர்களை, ஏன் தமக்குத் துரோகம் செய்தவர்களையும், அவரவர் வாழும் இடங்களில் அவர்களின் தேவைகளில், நேரங்களில் சந்திக்க விரும்புகிறார். நாம் இறப்பை சந்திக்கும் வேளையில் நம்பிக்கையும், ஐயமுள்ள இடத்தில் விசுவாசத்தையும் மனவருத்தம் ஆட்கொள்ளுமிடத்தில் மன்னிப்பை வழங்கி நமக்கு புதுவாழ்வு தர உயிர்த்த இயேசு விரும்புகிறார். உயிர்த்த இயேசுவை சந்திப்போமா? புது வாழ்வைக் காண்போமா? "நான் ஆண்டவரைக் கண்டேன்" என்று முழங்குவோமா?

## மனிதரோடு வாழ உயிர்த்த மாபரன் இயேசு

பொல்லாத மக்களின் பாவத்துக்காய்
கல்வாரி மலையில் சிலுவைதனில்
எல்லோருக்குமாய் இன்னல்பட்டு
விருப்பத்தோடு சுமந்து சென்றார்.
தமக்கென்று உறைவிடம் ஒன்றையும்
தேடி அலையவில்லை.
சுகங்களை தேடவில்லை
இறைவனின் நிலையை
பிடித்துக்கொள்ளவில்லை.
மக்களை பாவங்களிலிருந்து மீட்கவே
தமது உயிரைத் தந்தார்.
மன்னவனே உமக்காக
என் உயிரை நானும் தருவேன்.

மேரி இருதயநாதன், மறையாசிரியர்,
இரத்தினபுரி







**"கடவுள் அன்பாயிருக்கிறார்"(1யோவா 4:8) என்பதே இறைவனைப்பற்றிய சுருக்கமான வரையறை. அந்த அன்பை அவர் பல வழிகளில் வெளிப்படுத்துகிறார். இரக்கம் என்பது இறைவனின் பேரன்பின் கனிந்த வடிவம். தந்தை, மகன், தூய ஆவியார் என்னும் இறைவனின் மூன்று ஆள்தன்மையிலும் நாம் இறையிரக்கத்தை அனுபவிக்கின்றோம்.**

# இறைவனின் இரக்கம்

## இறையிரக்க ஞாயிறு



### 1. தந்தை இரக்கத்தின் ஊற்று

நமது வானகத்தந்தை இரக்கம் நிறைந்தவராக இருக்கிறார். இறைவன் இஸ்ரயேலருக்கு மேசே வழியாக முதன் முதலாக இப்படித் தம்மை வெளிப்படுத்தினார்: **"ஆண்டவர், இரக்கமும், பரிவும் உள்ள இறைவன். சினம் கொள்ளத் தயங்குபவர், பேரன்பு மிக்கவர். நம்பிக்கைக்குரியவர்"** (வி.ப 34:6) பேரன்பு, பரிவு, இரக்கம், கனிவு என்னும் சொற்கள் அனைத்துமே ஒரே பொருளையே குறிக்கின்றன. இறைவன் நிபந்தனையற்ற விதத்தில் நம்மை அன்பு செய்கிறார். நம் தகுதியின்மையையும் பொருட்படுத்தாமல் நம்மீது பரிவு காட்டுகிறார்.

இத்தகைய அன்பை அனுபவித்த திருப்பாடல் ஆசிரியர், **"ஆண்டவர் இரக்கமும், அருளும் கொண்டவர். நீடிய பொறுமையும், பேரன்பும் உள்ளவர்"** (தி.பா 103:8) என எடுத்துரைக்கின்றார். மேலும், **"உண்மையாகவே, என் வாழ்நாள் எல்லாம் உம் அருள் வளமும், பேரன்பும் எனைப் புடைசூழ்ந்து வரும். நானும் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்"** (தி.பா 23:6) என்ற தமது நம்பிக்கையையும் வெளிப்படுத்துகிறார். இறைவாக்கினர்கள் அனைவரும் கடவுளின் இரக்கத்தை இஸ்ரயேல் மக்களுக்கு மீண்டும் மீண்டும் நினைவூட்டினர். **"பால் குடிக்கும் தன் மகவைத் தாய் மறப்பாளோ? கருத்தாங்கினவள் தன் பிள்ளை மீது இரக்கம் காட்டாதிருப்பாளோ? இவர்கள் மறந்திடினும், நான் உன்னை மறக்கவே மாட்டேன்"** (எசா 49:15) என்னும் வாக்குறுதி இறைவனின் பேரன்பைத் தாயின் அன்பைவிட மேலானதாகக் காட்டுகிறது. அதே இறைவாக்கினர் எசாயா இறைவனின் அன்பை இப்படிக் காட்சிப்படுத்தியுள்ளார். **"ஆண்டவர் கூறுவது இதுவே: ஆறு–போல் நிறைவாழ்வு பாய்ந்தோடச் செய்வேன். பெருக்கெடுத்த நீரோடைபோல் வேற்றினத்தாரின் செல்வம் விரைந்துவரச் செய்வேன். நீங்கள் பால் பருகுவீர்கள். மார்பில் அணைத்துச் சுமக்கப்படுவீர்கள். மடியில் வைத்துத் தாலாட்டப்படுவீர்கள்"** (எசா 66:12-13)

தாயின் அன்புக்கு ஈடான இறைவனின் இரக்கத்தை மீண்டும் ஒரு காட்சியாகத் தருகிறார் எசாயா: **"தாய் தன் பிள்ளையைத் தேற்றுவதுபோல், நான் உன்னைத் தேற்றுவேன். எருசலேமில் நீங்கள் தேற்றப்படுவீர்கள்"** (எசா 66:13) இறைவனின் இரக்கத்தின் உச்சம் அவர் தம் ஒரே மகனையே நமக்காகப் பலியிட்டதுதான். **"தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும்பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்;** (யோவா 3:16)

### 2. இயேசு இரக்கத்தின் முகம்

**"நானும் தந்தையும் ஒன்றாய் இருக்கிறோம்"** (யோவா 10:30) என்று சொன்ன இயேசு, **"என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும்"** (யோவா 14:9) என்று துணிவுடன் அறிவித்தார். எனவே, இயேசுவே இறைத்தந்தையின் இரக்கத்தின் முகம்.

அவர் நம்மீது கொண்ட அன்பினால் தம் உயிரை நமக்காகக் கையளித்தார். இயேசுவின் இரக்கத்தைப் பவுலடியார் இப்படிப் புகழ்கிறார்: **"நேர்மையாளருக்காக ஒருவர் தம் உயிரைக் கொடுத்தலே அரிது. ஒருவேளை நல்லவர் ஒருவருக்காக யாரேனும் தம் உயிரைக் கொடுக்கத் துணியலாம். ஆனால், நாம் பாவிகளாய் இருந்தபோதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரை கொடுத்தார். இவ்வாறு கடவுள் நம்மீது கொண்டுள்ள தம் அன்பை எடுத்துக்காட்டியுள்ளார்"** (உரோ 5:7-8). இந்த இறைமொழி இறைவனின் அன்பையும், இயேசுவின் இரக்கத்தையும் ஒருசேர எடுத்துரைக்கிறது. இயேசுவின் இந்தத் தற்கையளிப்பை தன்வாழ்வில் அனுபவித்த பவுலடியார், **"இவரே என்மீது அன்பு கூர்ந்தார். எனக்காகத் தம்மையே ஒப்புவித்தார்"** (கலா 2:20) என்று நெகிழ்ச்சியுடன் அறிக்கையிட்டார்.

இயேசுவின் கனிந்த இதயத்தை நற்செய்தி நூல்கள் பல வடிவங்களில் வெளிப்படுத்துகின்றன. இயேசுவே **"நான் கனிவும், மனத்தாழ்மையும் உடையவன் ஆகவே, என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும்"** (மத்11:29) என்றார். **"நான் இம்மக்கள் கூட்டத்தின்மீது பரிவு கொள்கிறேன்"** (மத்.15:32) என்பது இயேசுவே பயன்படுத்திய சொல்லாடல் அந்தப் பரிவை அவர் தமது சொல், செயல், தீர்ப்பிடாத மனநிலை, அடையாளங்களால் வெளிப்படுத்தினார், **"அவர் தாமே வலுவின்மைக்கு ஆளாயிருப்பதால், அறியாமையில் இருப்போருக்கும், நெறிதவறி நடப்போருக்கும் பரிவு காட்டக் கூடியவராயிருக்கிறார்"** (எபி.5:2) என்று இயேசுவின் பரிவைப் பற்றி எபிரேயர் திருமடல் புகழ்ந்து பேசுகிறது.

**"ஒருவருக்கொருவர் நன்மை செய்து பரிவு காட்டுங்கள். கடவுள் உங்களைக் கிறிஸ்து வழியாக மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவர் ஒருவரை மன்னியுங்கள்;** (எபி.4:32) என்பது இயேசுவின் பரிவை மேற்கோள் காட்டி, பவுலடியார் தரும் அறிவுரை. இவ்வாறு, இயேசுவின் இரக்கத்தின் பல பரிமாணங்களை புதிய ஏற்பாடு விரிவாய் எடுத்துரைக்கிறது.

### 3. தூய ஆவியார் இரக்கத்தின் செயல் வடிவம்

தூய ஆவியார் நாம் இரக்கத்தின் பாதையில் செயல்பட நடத்திச் செல்கிறார். அவரே நமக்கு இரக்கத்தின் கருவிகளைத் தருகிறார். **"தூய ஆவியாரின் கனியோ அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் என்பவை ஆகும்"** (கலா 5:22) இந்தக் கனிகள் ஒன்பதுமே இரக்கத்தின் வடிவங்கள்தாம். இருப்பினும், பொறுமை, பரிவு, கனிவு என்பவை இரக்கத்தின் நேரடி வெளிப்பாடுகள். எனவே தூய ஆவியார்தான் நமக்கு இந்த இரக்கத்தின் கனிகளைத் தந்து உதவுகிறார்.

இயேசு தூய ஆவியாரின் ஆற்றலால்தான் அருள்பணியாற்றினார். இரக்கச் செயல்களில் ஈடுபட்டார். **"இயேசு தூய ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்டு யோர்தான் ஆற்றைவிட்டுத் திரும்பினார்"** (லூக்4:1) என்று வாசிக்கிறோம். அந்த ஆவியாரால்தான் அவர் விடுதலைப் பணிகளை ஆற்றினார். இதை இயேசுவே அறிவித்தார். **"ஆண்டவ–ருடைய ஆவி என்மேல் உளது. ஏனெனில், அவர் எனக்கு அருள்–பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும்;** (லூக் 4:18) தான் அருள்பொழிவு செய்யப்பட்டதாக இயேசு சொன்னார். இந்தச் செயல்கள் அனைத்துமே இரக்கத்தின் செயல் வடிவங்கள்தானே! எனவே, தூய ஆவியார் தந்த ஆற்றலாலேதான் இயேசுவின் பணிவாழ்வும் இரக்கத்தின் வடிவங்களும் வெளிப்பட்டன.

மேலும், தூய ஆவியாரின் அருளால்தான் பாவ மன்னிப்பு என்னும் இறைவனின் மாபெரும் இரக்கச் செயல் நடைபெறுகிறது. உயிர்த்த இயேசு தம் சீடரிடம், **"தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள். எவருடைய பாவத்தை மன்னிப்பீர்களோ, அது அவர்களுக்கு மன்னிக்கப்படும்"** (யோவா 20:22) என்றார்.

தொடக்கத்திருச்சபையில் பந்தி பரிமாறும் இரக்கச் செயலுக்கு திருத்தொண்டர்களை நியமிக்கும் போது **"தூய ஆவியாரின் வல்லமையும், ஞானமும் நிறைந்தவர்–களுமான எழுவரை"** (தி.பா 6:3) ஸ்தேவான், பிலிப்பு உள்ளிட்ட எழுவரைத் தேர்ந்தெடுத்தனர். தூய ஆவியா-ரால் நிரப்பப்பட்டவர்களே இரக்கச் செயல்களை ஞானத்தோடு செய்ய முடியும் என்பதற்கு இந்நிகழ்வு ஒரு சான்றல்லவா!

தூய ஆவியாரே நமக்குப் பரிவுள்ளமும், இரக்கமும் தருகிறார் என்பதைப் பவுலடியாரின் பின்வரும் கூற்று எண்பிக்கிறது: **"கிறிஸ்துவிடமிருந்து நீங்கள் ஊக்கம் பெற்றுள்ளீர்களா? அன்பினால் ஆறுதலும், தூய ஆவியாரால் தோழமையும் பரிவுள்ளமும், இரக்கமும் கொண்டுள்ளீர்களா?;** (பிலி.2:1)

**"சகோதர சகோதரிகளே, ஒருவர் ஏதேனும் குற்றத்தில் அகப்பட்டுக் கொண்டால், தூய ஆவியாரைப் பெற்றிருக்கும் நீங்கள் கனிந்த உள்ளத்தோடு அவரைத் திருத்துங்கள்;** (கலா 6:1) என்னும் அறிவுரை கனிவு என்னும் கொடை தூய ஆவியாரிடமிருந்தே வருகிறது என்பதை எண்பிக்கிறது. ஒரே கடவுள் மூன்று ஆள்களாய்ச் செயல்படுகிறார் என்பது நம் நம்பிக்கை. மூவோர் இறைவனின் இரக்கத்தைச் சுருக்கமாக திருத்தூதர் பணிகள் நூலில் காண்கிறோம். **"கடவுள் நாசரேத்து இயேசுவின் மேல் தூய ஆவியாரின் வல்லமையைப் பொழிந்தருளினார். கடவுள் அவரோடு இருந்ததால், அலகையின் கொடுமைக்கு உட்பட்டிருந்த அனைவரையும் அவர் விடுவித்து எங்கும் நன்மை செய்துகொண்டே சென்றார்;** (தி.பா 10:38) என்று வாசிக்கிறோம்.

தந்தை இறைவன் அவர் திருமகன் இயேசுவின் வழியாகத் தூய ஆவியாரின் ஆற்றலால் நம்மீது இரக்கத்தைப் பொழிகின்றார். எனவே, தந்தைக்கும், மகனுக்கும் தூய ஆவியாருக்கும் நாம் எப்போதும் புகழ்ச்சியும் நன்றியும் செலுத்துவோமா!

## உயிர்த்து விடு

**உயிர்த்துவிட்டார், உயிர்த்துவிட்டார்**
**எங்கள் இயேசு உயிர்த்துவிட்டார்**
**பாவம் என்னும் சாத்தானை**
**வெற்றி பெற்று உயிர்த்துவிட்டார்**
**சோதனைள், வேதனைகள்**
**வாழ்வினிலே வரும்போது**
**உயிர்த்த இயேசு துணை கொண்டு**
**பொறுமையுடன் வென்றுவிடு**
**அன்பு, பாசம், பொறுமையெனும்**
**நற்பண்பினை கடைபிடித்து**
**கொடூரமான பாவத்தினை**
**முறியடித்து உயிர்த்துவிடு**
**தூய வாழ்வு வாழ்வதனால்**
**இயேசுவுக்கு சாட்சியாக**
**உலகந் தனை புதுப்பிக்க**
**புது மனிதனாய் உயிர்த்துவிடு**

**திருமதி. மொரீன் அலெக்சாண்டர்,**
**இராஜகிரிய**







## 01 இலங்கை கத்தோலிக்க...

அக்களிப்புமிக்க இந்த உயிர்ப்புக்காலம், கிறிஸ்துவுடனான நெருக்கத்தை ஆழப்படுத்தவும், எங்கள் மத்தியில் உயிர்த்த ஆண்டவர் உயிரோடு இருக்கிறார், அவர் நிச்சயமற்ற நிலைகளிலும் சவால்கள் நிறைந்த வாழ்விலும் எம்முடன் பயணிக்கிறார் என்னும் விழிப்புணர்வு நிலைக்குள் நாம் புதுப்பிக்கப்படவும், தூண்டுதல் அளிக்கிறது (காண் லூக்கா 24:13-32). நமது வாழ்வில் மோதும் சவால்கள், நம்பிக்கையீனங்களை எதிர்கொள்ள உயிர்த்த இயேசுவின் மீதுள்ள எமது நம்பிக்கை உறுதிதருகின்றது. தனது மந்தைகளைக் கிறிஸ்து கைவிடுவதில்லை. அவர் எப்போதும் எங்களுடன் இருக்கிறார் என்பதை உயிர்ப்பு விழா நினைவூட்டுகிறது. இதுவே கிறிஸ்தவனின் மகிழ்ச்சிக்கு ஆணிவேராய் அமைந்துள்ளது.


நாம் ஒருதேசிய இனமாக, ஓர் உறுதியற்ற சமூக-அரசியல் நிலைப்பாட்டுக்குள் வாழ்ந்துவருகின்றோம். மக்களின் தேவைப்பாடுகள் உணர்வுபூர்வமான புரிதலுடன் நிறைவேற்றப்படவேண்டிய நிலையுள்ளது. நாம் அடிப்படைத் தேவைகளுக்காக ஏங்கிப் போராடும் ஏழை எளிய மக்களைச் சந்திக்கிறோம். எமது தாய் நாட்டில் என்றுமில்லாதவாறு ஏழை - பணக்காரர்களுக்கு இடையே மிக அகலமான இடைவெளி ஒன்றுள்ளது. மின்னல் வேகத்தில் நாளுக்கு நாள் உயர்ந்து செல்லும் விலைவாசி, ஏழைகளுக்கு மேலும் மேலும் சுமையாகிறது. மிகப்பெரிய அபிவிருத்தித்திட்டங்கள் ஒருபுறம் தீட்டப்பட, மறுபுறத்தில் சாதாரண மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் உள்ளன. கட்டுப்பாட்டை இழந்த நிலையை அடைந்துள்ள மிகப்பரவலான போதைப் பொருள் பாவனையானது, குழந்தைகளையும் இளமட்ட வயதுப் பருவத்தினரையும் விழுங்கும் மிகப் பெரிய தீமையாய் உருவெடுத்துள்ளது. கிறிஸ்தவ நன்நெறிகளின் வழியில் இச்சமூக தீமைகளிலில் இருந்து விடுபடவும் அதற்கு முற்றுப்புள்ளி வைக்கவும் முன் வருவோமாக.

நாம் கடவுளுக்கு நன்றி கூறி, தனித்தன்மை வாய்ந்த சமாதானம் என்னும் கொடையில் மகிழும் இவ்வேளையில், வாழ்வின் அடிப்படைத் தேவைகளுக்காக ஏங்கும் ஏழைகளையும் நீதிக்காக குரலெழுப்பும் மக்களையும் மனதில் கொள்ளுவோம். தேவையிலிருப்போர் மீது கரிசனை கொள்ளவே எமது கிறிஸ்தவ சீடத்துவம் எப்போதும் எமக்கு அழைப்பு விடுக்கிறது. ஏனெனில் துன்பப்படுவோரில் இயேசுவின் சிதைந்த முகத்தை அடையாளம் காண்பது எமது கடமையாகும். எமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தேவையில் உழல்வோர் மீது கருணை காட்டும் அவசியத்தை எமக்கு எப்போதும் நினைவூட்டுகிறார். எமது உயிர்ப்பு விழாவின் மகிழ்ச்சி எம்மைச் சூழவுள்ளோரின் வலியைப் போக்க வேண்டும். சமுதாயத்தை இருளடையச் செய்யும் சமூக, ஒழுக்க தீமைகளை அகற்றும் வெளிச்சத்தை பரப்ப நாம் உயிர்த்த ஆண்டவரால் அழைப்புப் பெற்றுள்ளோம். இவ்வழைப்பு எங்கள் மூலமாக, எங்கள் மகிழ்வு, நம்பிக்கை, சீடத்துவவாழ்வு என்பவற்றின் மூலமாக, இனம் காணப்படுவதாக. நாம், உயிர்த்த ஆண்டவர் தம் சீடர்களுக்கு அளித்த சமாதானத்தின் தூதுவர்களாகத் துலங்குவோமாக.

எமது இறை நம்பிக்கையாளருக்கும் வாசகர்களுக்கும் உயிர்த்த இயேசுவின் மகிழ்வும் அமைதியும் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.



மேதகு ஆயர் J. வின்ஸ்டன் எஸ். பர்னாந்து, SSS,
தலைவர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை



மேதகு ஆயர் டி. வலன்ஸ் மெண்டிஸ்
பிரதம செயலாளர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

**எமது கத்தோலிக்க அச்சகமானது இம்மாதம் 15ந் திகதி தொடக்கம் 21ந் திகதி வரை உயிர்ப்பு பெருவிழா விடுமுறைக்காக மூடப்பட்டிருக்கும். மீண்டும் 22ந் திகதி வழமைபோல் அச்சகம் இயங்கும் என அறியத்தருகின்றோம்.**
**– இயக்குனர்.**

## 05 சிலுவையிலிருந்து...

37. சிலுவையை சுமப்பது, சிலுவையை நேசிப்பது, உடலை ஒறுத்து அடிமைப்படுத்துவது, புகழுக்குத் தப்புவது, பழிச்சொற்களை உவகையுடன் ஏற்பது, தன்னைப் பழிப்பது, தான் பழிக்கப்பட விரும்புவது, எந்த எதிர்ப்பையும் இழப்பையும் தாங்குவது, இந்த உலகின் ஆக்கம் எதிலும் ஆவல் கொள்ளாதிருப்பது - இவை மனிதனுக்கு இயல்பானவை அல்ல.

38. நீ உன்னைப் பற்றி நின்றால், இவற்றில் ஒன்றையும் உன்னால் செய்யமுடியாது.

39. நீ விசுவாசம் என்ற படைக்கலம் தாங்கி, அதில் கிறிஸ்துவின் சிலுவைச் சின்னத்தைப் பதித்திருந்தால், மாற்றானான பேய்க்கும் அஞ்சமாட்டாய்.

40. எனவே, உனக்காகச் சிலுவையில் அறையப்பட்ட உன் ஆண்டவரின் அன்புக்காகச் சிலுவையை, நல்ல உண்மையுள்ள கிறிஸ்துவின் ஊழியனைப்போல, ஆண்மையுடன் ஏந்திச்செல்ல நீ துணிவு கொள்.

41. தீமையினால் விளையும் துன்பத்திற்கும் வேதனைக்கும் தப்பும் வழி அவற்றைப் பொறுமையோடு ஏற்றுக்கொள்வது ஒன்றுதான்; வேறு வழியில்லை.

42. நீ ஆண்டவரின் நண்பனாக இருந்து அவருடன் பங்குபெற விரும்பினால் அவருடைய கிண்ணத்தை அன்புடன் பருகு.

43. ஆறுதல்களைப் பற்றிய சிந்தனையை இறைவனுக்கு விட்டுவிடு. அவருடைய விருப்பத்திற்கு ஏற்ப அவர் எதுவும் செய்யட்டும்.

44. ஆனால், உன் துன்பங்களைத் தாங்கிக்கொள்ள நீ தயாராக இரு. அவற்றைப் பேராறுதல் என எண்ணு. ஏனென்றால், நீ ஒருவனே அனைத்தையும் தாங்கிக்கொள்ள வல்லவனாயிருந்தாலும் இம்மைக் காலத்தில் நாம் படும் துன்பங்கள் நம்மிடம் வெளிப்படப்போகிற மகிமையோடு ஒப்பிடவும் தகுதியற்றவை. (உரோ 8:18)

45. எனவே என்னை நேசிக்கவும், எனக்கு என்றும் பணிபுரியவும் நீ விரும்பினால், துன்புறவேண்டியது உனது கடமையாகும்.

46. என் பெயரின்பொருட்டு ஏதாவது துன்புறத் தகுதி பெற்றிருப்பது; ஒருநாள் உனக்கு எத்துணை பெரிய மகிமை! இறைவனின் எல்லாப் புனிதர்களுக்கும் எத்துணை பெருமை! உன் அயலாருக்குத்தான் எத்துணை சிறந்த எடுத்துக்காட்டு!

47. ஏனெனில், துன்புற விரும்புவர் சிலரேயாயினும், பொறுமை காக்கச் சொல்லுபவர் அனைவரும் ஆவர்.

48. பலர் உலகுக்காகப் பெருந்துயரங்களைப் பொறுத்துக் கொள்ளும்போது, நீ எனக்காக நல்மனதுடன் கொஞ்சமாவது இன்னலுற வேண்டியது முறையல்லவா?

49. நீ இறந்துகொண்டே வாழ்க்கை நடத்தவேண்டும் என்பதை உறுதியாகத் தெரிந்துகொள். ஒருவன் எவ்வளவு அதிகமாகத் தனக்கு இறக்கின்றானோ, அவ்வளவு அதிகமாக இறைவனுக்கு வாழத் தொடங்குகிறான்.

50. எனக்காக மலர்ந்த முகத்துடன் அல்லல்படுவதற்கு மேலாக இறைவன் விரும்பத்தக்கதும், உலகில் உனக்குப் பயன் தருவதும் வேறொன்றுமில்லை.

51. என்னைச் சார்ந்தவரையில், மிகுந்த ஆறுதல் பெற்றுக் களித்திருப்பதைவிட, எனக்காக இன்னல்களை ஏற்றுக்கொள்வதே, உம் ஆசையாக இருக்க வேண்டும். அப்போதுதான் நீ என்னை அதிகம் ஒத்திருப்பாய்; எல்லாப் புனிதரைபோன்றும் இருப்பாய்.

52. மிகுந்த இன்பங்களிலும் ஆறுதல்களிலும் அல்ல, மாறாக, பெரும் இடுக்கண்களையும் இன்னல்களையும் தாங்குவதில்தான் நம் பலன்களும் நமது வளர்ச்சியும் அடங்கியிருக்கின்றன.

53. துன்புறுவதைத் தவிர வேறொன்று மனித மீட்புக்குச் சிறந்ததும் பயன் மிக்கதுமாக இருந்திருந்தால், நான் அதை உறுதியாகச் சொல்லாலும் செயலாலும் காட்டியிருப்பேன்.

54. ஆனால், தன்னைப் பின்செல்லும், பின்செல்ல ஆவல் கொள்ளும் எல்லாச் சீடர்களும் சிலுவையைச் சுமக்க வேண்டுமென்று தெளிவாக அறிவுறுத்திக் கூறுகிறார்; ‘என்னைப் பின்செல்ல விரும்புகிறவன், தன்னையே மறுத்து தன் சிலுவையைச் சுமந்துகொண்டு என்னைப் பின்தொடரட்டும்’ (மத் 16:24, லூக் 9:23)

55. ஆகவே, அனைத்தையும் கற்று ஆய்ந்தபின், நம் இறுதித் தீர்மானமாகக் கொள்ளவேண்டியது என்னவென்றால், ‘பல துன்பங்களின் வழியாகவே நாம் கடவுளின் அரசிற்குள் நுழையவேண்டும்.(தி.ப 14:22) என்பதுதான்.

**பல துன்பங்களின் வழியாகவே நாம் கடவுளின் அரசிற்குள் நுழைய வேண்டும்.**




## 04 பலரின் மீட்புக்காக...

கொண்டுள்ளது. நற்கருணையே கிறிஸ்தவ வாழ்வின் ஊற்று, உச்சமுமாக அமைகிறது. நற்கருணை உணவு, பலி, பிரசன்னம், பலருக்காகச் சிந்தப்படும் இரத்தம் (புனிதமாற்கு 14:24) என்ற இயேசுவின் வார்த்தைகள் அவரே தம் உடலை உலகிற்கு வாழ்வு தரும் பலிப்பொருளாகக் கருதினார் என்பதை உறுதி செய்கின்றன. அவர் பலியானதால் அனைவருக்கும் விருந்தானார். உலகிற்கு வாழ்வு தரும் உணவாக மாறிய இயேசு ‘இது என் உடல், இது என் இரத்தம்’ என்று தமது வார்த்தைகளால் எந்நாளும் நம் மத்தியில் பிரசன்னமாயிருக்கிறார்.

‘உலகம் முடியும்வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்’ (மத் 28:20) என்ற இயேசுவின் உடனிருப்பு நற்கருணை வழியாகத் தொடர்கிறது. அவரது பிரசன்னத்தால் ஈர்க்கப்பட்டு, அவரைப் போன்று பலியாகி, அவரைப்போன்று பிறருக்கு வாழ்வானதே (விருந்தாகவே) கிறிஸ்தவம்.

**எமது இணையத்தள முகவரி**
**http://www.colomboarchdiocesancatholicpress.com**

## 12 வல்லமை விளங்கிடும்...

உயிர்ப்பின் பலன்களை நாம் பெற வேண்டுமென்றால் கிறிஸ்துவோடு பிறருக்கான பணியில், அதிலும் சிறப்பாக ஏழை, எளிய மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை வாழ்விற்காக உழைத்துப் போராடி மடிய வேண்டும்.

ஆம், ‘கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின் அவரோடு வாழ்வோம் என்பதே நம் நம்பிக்கை’ (உரோ6:8) பாவ வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் நாம் இறந்தவர்கள். இதை நாம் எப்படியெல்லாம் வாழ்ந்து காட்டலாம்? எப்படியெல்லாம் உலகிற்கு எடுத்துச் சொல்லலாம்?

1. இறைவாக்கை ஏற்றுக்கொள்வோம்.
2. இயேசு கிறிஸ்துவின் நிலைப்பாட்டையும் செயல் பாட்டையும் நமதாக்குவோம். குருடர்களை பார்க்கச் செய்வோம் சிறைப்பட்டோரை விடுவிப்போம். ஒடுக்கப்பட்ட மக்கள் உரிமை வாழ்வுபெறச் செய்வோம். இவைகளை நாம் செய்யும்போது, இயேசுவின் துன்பங்களில் பங்கு பெறுவோம். இதெல்லாம் நம்மால் முடியுமா? கிறிஸ்துவின் அருளோடு நம்மால் இவற்றைச் செய்ய முடியும். ஏனெனில் உயிர்த்த கிறிஸ்துவே நம் ஒவ்வொருவர் மீதும் தன் தூய ஆவியைப் பொழிந்து, அவரது மீட்புப் பணியைத் தொடர பயமற்ற துணிச்சலைத் தருகிறார். உலகம் தர இயலாத அமைதியைத் தருகிறார். அதையும் நமக்கு நிறைவாகத்தருகிறார்.

முடிவாக

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே எமது நாட்டிலும் அகில உலகத்தையும் இன்றைய இருளிலிருந்தும், சாவின் பிடியிலிருந்தும் உயிர்த்தெழச் செய்யும், அப்பணிக்காக எங்களை நாங்கள் முற்றிலுமாக அர்ப்பணித்துக்கொள்ள உம் ஆவியையும், அன்பையும் தந்து நற்செய்தியை நாங்கள் வாழ்ந்து போதிக்கவும், உம்மைப்போல எல்லாத் தீமைகளையும், அநீத அக்கிரமங்களையும் எதிர்த்துப் போராடி வெற்றி காணவும் எமக்கு உம் அருளையும், அனைத்து வல்லமையையும் தந்தருளும் அல்லேலூயா! அல்லேலூயா!!

# இனிய வாசகர்களுக்கு

## உங்கள் உள்ளங்களுக்கும்
## இல்லங்களுக்கும்
## அன்பும், சமாதானமும் நிறைந்த
## உயிர்த்த ஆண்டவரின் பெருவிழா
## நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!!!

**கொழும்பு கத்தோலிக்க அச்சகத்தின்**
**இயக்குனர், ஆசிரியர்கள் மற்றும்**
**பணி புரியும் ஊழியர்கள்**

பாரின் பாவம் நீக்கிடவே
பாரச் சிலுவைதனை ஏற்று
பரமன் சித்தம் நிறைவேற
தன்னுயிர் தனையே தந்தவராம்
எம் பெருமான் இயேசு

மண்ணின் மாந்தர் வாழ்ந்திடவே
குருதி தனையே சிந்தி இன்று
மனிதர் யாவருக்கும்
புது வாழ்வு தனையே ஈந்தவராம்

பரமனின் சித்தம் நிறைவேற்றி
பாருக்கு புத்தொளி தந்திடவே
மரணம் வென்று உயிர்த்தெழுந்தார்
அலகையின் ஆட்சியில்
வெற்றிக் கொண்டார்

உயிர்த்த ஆண்டவர்
எமக்களித்த
பாஸ்கா விழா தனையே
மாந்தர் நாமும் கூடியிங்கு
மகிழ்வுடனே
கொண்டாடிடுவோம்!!!

**அல்லேலூயா அல்லேலூயா**






அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்